Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, DECEMBER 18, 2021

சனிக்கிழமை டிசெம்பர் 18, 2021 | ஒளி: 07 கதிர்: 182 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE ரூ.10

# யாழில் மலேரியா



யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியை சேர்ந்த 27 வயதான ஒருவருக்கு மலேரியா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் டி. சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

தொற்றுக்குள்ளானவர் தென்னாபிரிக்காவிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் நாட்டிற்கு வருகை தந்த ஒருவரென தெரியவந்துள்ளது.

காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் கடந்த புதன்கிழமை இவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# வடக்கில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடம்



## வவுனியாவில் வைத்து அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கருத்து

**இதனால், வட பகுதி மக்கள் அதிக நன்மைகளை அடைவார்கள்**

வடக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்ள சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடங்களை வழங்கியுள்ளோம் எனத் தெரிவித்துள்ள நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. இதனால், வட பகுதி மக்கள் அதிக நன்மைகளை அடைவார்கள் என்றார்.

வவுனியாவில் நேற்று (17) இடம்பெற்ற நிகழ்வில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இணையத்தில் சான்றிதழ்கள்

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை பெற்றுக்கொள்வது உட்பட பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளை இணையத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் www.rgd.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று உரிய ஆவணங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

# காஸ் நிறுவனங்களுக்கு நீதிமன்றம் கட்டளை



இலங்கை தர நிர்ணய நிறுவகத்தினால் (SLSI) அனுமதியளிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களை மாத்திரமே சந்தைக்கு விநியோகிக்குமாறு லிட்ரோ மற்றும் லாஃப் சமையல் எரிவாயு நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று (17) பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# மூவின இளைஞர்கள் 360 பேர் இராணுவ பயிற்சியில் இணைவு



யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழுள்ள யாழ்ப்பாணம் வசாவிளான் படை அலகு பயிற்சிப் பாடசாலையில் தமிழ், முஸ்லிம், சிங்கள சிப்பாய்களை இணைத்துக் கொள்வதற்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மூவினங்களையும் சேர்ந்த 360 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முதற்கட்ட பயிற்சிகள் 51 வது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமானது.

"2020 - 2025 முன்நகர்விற்கான மூலோபாய திட்டமிடல்" க்கு அமைவாக யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்குவின் வழிகாட்டலின் கீழ் நான்கு மாத ஆட்சேர்ப்பு பயிற்சித் திட்டம், கடந்த 13ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# கீரிமலையில் காணி சுவீகரிப்பு; அதிரடியாகத் தடுத்து நிறுத்தம்

**எம். றொசாந்த்**



வலி.வடக்கு பிரதேசத்தின் பகுதியில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக, கடும் மழைக்கு மத்தியிலும் நேற்றுக்காலை (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கீரிமலை ஜே/226, காங்கேசன்துறை மேற்கு,ஜே/223 பகுதிகளில் 21 பேருக்குச் சொந்தமான 30 ஏக்கர் காணிகளை படையினருக்கு சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், அவ்விடத்தில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப்பலரும் தங்களுடைய கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தினர். இதனால், காணி அளவீடு செய்வதற்காக வந்திருந்த நில அளவை திணைக்களத்தினர், காணிகளை அளவீடு செய்யாது திரும்பிச் சென்றனர்.

தொடர்ச்சி P2

# சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க முடியவில்லை

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு



சமையல் எரிவாயு சிலிண்டர்களை கடந்த மூன்று நாள்களாக, சந்தைக்கு விநியோகிக்க முடியவில்லையெனத் தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனம், சிலிண்டர்களை நிரப்புவதற்கு தேவையான சமையல் எரிவாயு இருப்பு தம்மிடம் இல்லையெனவும் அறிவித்துள்ளது.

EPIC BALTA கப்பலில் கடந்த சனிக்கிழமை (11) கொண்டுவரப்பட்ட 3,200 மெட்ரிக் தொன் எல்.பி சமையல் எரிவாயுவை நுகர்வோர் விவகார அதிகார சபை நிராகரித்தது. மெர்காப்டன் உரிய தரத்தில் இல்லாமையே அதற்கு காரணமாகும்.

தொடர்ச்சி P2

# தளர்த்தியமை வருத்தமளிக்கிறது



நாடு கொரோனா தொற்று அபாயத்தில் உள்ள போதிலும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மேலும் தளர்த்த அரசாங்கம் எடுத்த தீர்மானம் வருத்தமளிப்பதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டல் விதிமுறைகள், அழுத்தத்தின் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானமா என்ற பாரிய சந்தேகம் எழுந்துள்ளதாக அதன் தலைவர் உபுல் ரோஹண, ஊடகங்களுக்கு நேற்று (17) தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டங்கள் தளர்த்தப்படுவதாலும், பண்டிகைக் காலங்களில் பொதுமக்களின் பொறுப்பற்ற நடத்தையாலும் நாட்டில் கொரோனா தொற்று விரைவில் மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

# பிள்ளையார் சிலை உடைத்து சேதம்

**கனகராசா சரவணன்**



அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள கஞ்சிக்குடியாறு சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை இனந்தெரியாத விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (16) இரவு இடம்பெற்றள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# பூப்பனை மரணங்கள் பூஸ்டர் மரணங்கள் அல்ல

**ஆ.ரமேஸ்.**



நுவரெலியா, கந்தப்பளை கொங்கோடியா கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பூப்பனை தோட்டத்தில், 50 வயதுக்கு மேற்பட்ட மூவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மரணமடைந்தனர்.

இவ்வாறு மரணமடைந்தரவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டமைக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை, என தெரிவித்துள்ள கந்தப்பளை பொது சுகாதார பரிசோதகர் அதிகாரி டப்ளியூ.ஜி.அமில, இந்த மரணங்கள், இயற்கை மரணங்கள் என்றார்.

மூன்று மரணங்கள் குறித்து நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதணை அறிக்கையை குடும்பத்தாருக்கு வழங்கியுள்ளதுடன், அதில் இயற்கை மரணங்களென அறிவிக்கப்பட்டு, சடலங்களும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2

# 11 நாள்கள் சிரிக்கத் தடை

வடகொரிய நாட்டு மக்கள், அடுத்த 11 நாள்களுக்கு சிரிக்கக்கூடாது, மது அருந்தக்கூடாது, பிறந்தநாள் விழாக்களை கொண்டாடக்கூடாது என வடகொரிய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

வடகொரியாவின் தற்போதைய அதிபர் கிம் ஜோங் உன்னின் தந்தை கிம் ஜோங் இல் கடந்த 2011 ஆம் ஆண்டு இதே நாளில் மரணம் அடைந்தார். இவருடைய கடைசி மகனான கிம் ஜோங் உன் ஜனாதிபதியாகி, தற்போது வரையில் 3ஆவது தலைமுறையாக ஆட்சி செய்து வருகிறார். வட கொரியாவின் தற்போதைய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் தந்தை கிம் ஜோங் இல் கடந்த 2011ஆம் ஆண்டு இதே நாளில் மரணமடைந்தார்.

இதனால் வடகொரிய நாட்டு மக்கள் அடுத்த 11 நாள்களுக்கு சிரிக்கக்கூடாது, மது அருந்தக்கூடாது, பிறந்தநாள் விழாக்களை கொண்டாடக்கூடாது என வடகொரிய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ஒமிக்ரான் தொற்றிய ஒருவர் வெளியேறினார்



இலங்கையில் உறுதிப்படுத்தப்பட்ட ஒமிக்ரான் திரிபு தொற்றிய மூவரில் ஒருவர், நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் என, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான, விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சில பி.சி.ஆர் மாதிரிகள், மேலதிக பரிசோதனைக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னரே குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார் என்று தெரிவித்த ஹேமந்த ஹேரத், எனினும்,

தொடர்ச்சி P2

# 40 க்கு பாலியல் சேஷ்டை; 70 க்கு விளக்கமறியல்

**செந்தூரன் பிரதீபன்**

நெல்லியடி கரணவாய் குருக்கள் பகுதியைச் சேர்ந்த 40 வயதான பெண்ணொருவருக்கு தொடர்ச்சியாக பாலியல் சேஷ்டையை காண்பித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 70 வயதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# 3 தூதரகங்கள் மூடப்பட்டன

வெளிநாடுகளிலுள்ள மூன்று இலங்கை தூதரகங்களை மூடுவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நைஜீரியாவிலுள்ள இலங்கை தூதரகத்தையும் ஜெர்மனியிலுள்ள பிரேங்பர்ட் மற்றும் சைப்பிரஸிலுள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சேவையின் தேவை மற்றும் செலவீனங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# 'நாவலர் ஆண்டு' பிரகடனம்





சைவத் தமிழ் உலகிற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இருநூறாவது ஜனன ஆண்டான 2022ஆம் ஆண்டை 'நாவலர் ஆண்டு' என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனம் செய்துள்ளது. இந்தத் தீர்மானத்தை அங்கிகரிக்கும் நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று (17) நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரகடனத்திற்கான அங்கிகாரத்தையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் வகையில் பிரதமரினால் அங்கிகாரக் கடிதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வடக்கில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடம்



இலங்கையானது சீனாவுடனும், இந்தியாவுடனும் நெருக்கமான தொடர்புகளை சிறிமாவோ பண்டார நாயக்கா காலத்திலிருந்து பேணுகின்றது. அவருடைய காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்ட போது, எமது நாடு நடுநிலையாக செயற்பட்டிருந்தது. தற்போதும் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடு நிலை காணப்படுகின்றது.

**“ எமது மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும். வடக்கில் இந்தியாவும், சீனாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்**

அதனால்தான், ஜனாதிபதியுடன் பேசியே முடிவுகளை எடுக்கின்றோம் என்றார்.

எமது பகுதிகளை எந்த நாடுகளுக்கும் விற்கவில்லை. எந்த நாட்டுக்கு சார்பாகவும் செயற்படவில்லை. அபிவிருத்தி செய்வதற்கு சில பகுதிகளை வழங்குகின்றோம். இதனால் எமது மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும். வடக்கில் இந்தியாவும், சீனாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் என்றார்.

# யாழில் மலேரியா

மிக நீண்டகாலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பதிவாகிய மலேரியா தொற்றாளர் இவராவார். இவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# காஸ் நிறுவனங்களுக்கு நீதிமன்றம் கட்டளை

இதேவேளை, எதிர்காலத்தில் நுகர்வோர் அதிகார சபை மற்றும் இலங்கை தரநிர்ணய நிறுவகத்தின் அனுமதிபெற்ற எரிவாயு சிலிண்டர்களை மாத்திரமே சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று(17) உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கட்டளையை பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கை 2022 ஜனவரி 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

# சிலிண்டர்களை...



இந்த கப்பல், பங்களாதேஷின் மொங்லா துறைமுகத்திலிருந்து நாட்டை வந்தடைந்தது. இந்நிலையில், 2000 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை ஏற்றிய பெரிக்லிஸ் கப்பல் கொழும்பை நேற்று முன்தினம் (16) அண்மித்தது. மாலைத்தீவிலிருந்து இந்த கப்பல் நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

இந்த கப்பலிலுள்ள சமையல் எரிவாயுவின் தரத்தை பரிசோதிப்பதற்காக மாதிரிகளை பெற்றுக்கொண்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஷாந்த திசாநாயக்க தெரிவித்தார்.

மாதிரிகள் பரிசோதனைகளுக்காக இரண்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாதிரி பரிசோதனையின் பின்னர் அது நிபுணர் குழுவிற்கு அனுப்பப்பட்ட பின்னரே சமையல் எரிவாயுவை ஏற்றுக்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

சந்தையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையிலேயே இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தம்மிடம் சமையல் எரிவாயுவும் கையிருப்பில் இல்லையெனத் தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனம் கடந்த 3 நாட்களாக எந்தவொரு சமையல் எரிவாயு சிலிண்டரையும் சந்தைக்கு விநியோகிக்கவில்லையென தெரிவித்துள்ளது.

இதேவேளை, 25 சதவீதத்திற்கும் குறைவாகவே தாம் சந்தைக்கு சமையல் எரிவாயு விநியோகிப்பதாக லாஃப்ஸ் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மூவின இளைஞர்கள்...

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்த 51 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க சிவில் வாழ்க்கையிலிருந்து இராணுவத்திற்கு மாற்றும் செயல்முறைக்கு அடிப்படை இராணுவப் பயிற்சியின் முக்கிய அம்சங்கள் தொடர்பாக அவர் வலியுறுத்தினார். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களின் பொறுப்புகள் மற்றும் இராணுவப் பயிற்சியைப் பின்பற்றுவதற்கான ஒழுக்கம், நடத்தை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

குடாநாட்டில் வயாவிலான் படையலகு பயிற்சிப் பாடசாலையில் முதன் முதலாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இளைஞர்களை உள்ளடக்கிய குழு நாட்டின் அனைத்து பயிற்சிக்கான இணைத்துகொ ள்ளப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இந்த பாடநெறியானது 51 வது படைப்பிரிவு தளபதியவர்களின் கண்காணிப்பின் கீழ் 2022 ஏப்ரல் மாதம் வரையில் இடம்பெறவுள்ளது.

# பிள்ளையார் சிலை உடைத்து சேதம்

திருக்கோவில் பொத்துவில் பிரதான வீதியிலுள்ள கஞ்சிக்குடியாறு சந்தியில் குடியிருப்புக்கள் இல்லாத பகுதியில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன, பிள்ளையார் சிலை ஒன்றை வைத்தார். அதன்பின்னர், அவ்வீதியூடாக பயணிப்போர், வழிபட்டுவந்தனர்.

இந்த நிலையில், பிள்ளையர் சிலையின் கை, தும்பிக்கை போன்றவற்றை இனந்தெரியாத விசமிகளால் உடைத்து சேதமாக்கியுள்ளனர் என தெரிவித்த திருக்கோவில் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினர்.

# 40 க்கு பாலியல் சேஷ்டை...

மத்தொணி பகுதியைச் சேர்ந்த முதியவரே, எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பகுதியிலுள்ள அரச நிறுவனமொன்றில், குறித்த 40 வயதுடைய பெண் பணிபுரிந்து வருகின்றார். அவர் தினந்தோறும் பேருந்து ஏறுவதற்காக வரும் போது மேற்படி முதியவர் வாய் மற்றும் கை சைகைகளை பயன்படுத்தி குறித்த பெண்ணுக்கு தொடர்ச்சியாக பாலியல் சேஷ்டை காண்பித்துள்ளார்.

இந்நிலையில், அப்பெண் நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்று முன்தினம் (16) பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்த பொழுது, வெளியில் வருமாறு அழைத்து சைகை மூலம் சில்மிஷம் செய்துள்ளார்.

குறித்த முதியவரின் துன்புறுத்தல் தாங்கமுடியாத நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.


**“ வழக்கினை ஆராய்ந்த பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிரிசாந்தன், சந்தேக நபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அவரின் மனநிலை தொடர்பில் மனநோயியல் வைத்தியரிடம் காண்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது**

முறைப்பாட்டின் பிரகாரம் அவர் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்த பட்டிருந்தார்.

வழக்கினை ஆராய்ந்த பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிரிசாந்தன், சந்தேக நபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அவரின் மனநிலை தொடர்பில் மனநோயியல் வைத்தியரிடம் காண்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஒமிக்ரான் தொற்றிய ஒருவர் வெளியேறினார்



அவர் நாட்டிலிருந்து தற்போது வெளியேறியுள்ளார்.

விமான நிலையங்களில் இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம், வைரஸ் திரிபு நாட்டுக்குள் நுழைவதை தடுப்பது தங்களுக்கும், உலகில் வேறு நாடுகளுக்கும் முடியாமல் போயுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


# 11 நாட்கள் சிரிக்க தடை

கடந்த காலத்தில், துக்க காலத்தில் குடித்துவிட்டுபோதையில் பிடிபட்ட பலர் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளாக நடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் கைது செய்து அழைத்து செல்லப்பட்ட யாரும் இதுவரை திரும்பி வரவில்லையென கூறப்படுகிறது.

கிம் ஜோங் இல் இறந்த பிறகு ஒவ்வொரு ஆண்டும் இதே நடைமுறை வடகொரியாவில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த துக்கம் 10 நாட்களுக்கு கடைபிடிக்கப்படும். ஆனால் 10 வது நினைவு ஆண்டு என்பதால், 11 நாட்கள் துக்கம் கடைபிடிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த துக்க அனுசரிப்பின் போது பொதுமக்கள் மற்றும் தொழில்நிறுவனங்கள் தாங்கள் இருக்கும் பகுதியில் உள்ள பிச்சைக்காரர்களுக்கு உணவளிக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பூப்பனை மரணங்கள்...



இயற்கை மரணத்தை தழுவி கொண்ட மூவரும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தி கொண்டுள்ளனர். இருப்பினும் வயது முதிர்ந்த இவர்கள் சளி,சக்கரை நோய் மற்றும் இரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என பரிசோதனைகள் மூலம் கண்டறியபபட்டுள்ளது.

இந்நிலையில், இவர்களின் மரணம் இயற்கை மரணமென மரண சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள போதிலும்

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொண்டதால் இவர்கள் இறந்ததாக இப்பிரதேசத்தில் சிலர் மக்கள் மத்தியில் பீதியை கிளப்பி வருகின்றனர். இது உண்மைக்கு புறம்பான பிரசாரமாகும் எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறான பொய் பிரசாரங்களால் கந்தப்பளை பிரதேச மக்கள் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தி கொள்வதில் அச்சம் கொண்டுள்ளனர் என தெரியவருகின்றது.

கந்தப்பளை பிரதேசத்தில் ஒன்பதாயிரம் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுக்கப்படுகின்றது. நான்காயிரம் அதிகமானோருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

**“ மூன்றாவது தடுப்பூசியாக தற்போது இப்பிரதேசத்தில் செலுத்தப்படும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மக்கள் அச்சப்பட தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்**

இந்நிலையில், பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் விபரங்கள் தேவையாயின் கந்தப்பளை மக்கள், தோட்ட சுகாதார அதிகாரி மற்றும் வைத்தியர்களுடன் மற்றும் பொது சுகாதார காரியாலத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் மூன்றாவது தடுப்பூசியாக தற்போது இப்பிரதேசத்தில் செலுத்தப்படும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மக்கள் அச்சப்பட தேவையில்லையெனத் தெரிவித்த அவர், தடுப்பூசி தொடர்பில் பீதி கிளப்பும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# 3 தூதரகங்கள்...

இதற்கிணங்க, நைஜீரியாவிற்கான தூதுவர் மியன்மாருக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை, சைப்பிரஸிற்கான கொன்சியூலர் ஜெனரல், நாடு திரும்பியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாவலர்...



இதன்போது இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு. பத்மவாசனால் தத்ரூபமாக வரையப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இரு திருவுருவப் படைப்புகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# நெடுங்கேணியில் துப்பாக்கி சூடு; பிரதான சந்தேகநபர் கைது

க. அகரன்

வவுனியா நெடுங்கேணியில் வைத்து கடந்த 15ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தில் பெண்ணொருவர் பலியானார். அந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் நேற்று (17) கைதுசெய்யப்பட்டார்.

அன்றையதினம் பிற்பகல் 11.30 மணியளவில்

வவுனியா - நெடுங்கேணி - சேனைப்பிலவு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணை வழிமறித்த நபரொருவர் அப்பெண் மீது நாட்டுத்துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இதில், அப்பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். அவர், இரண்டு நாட்களின் பின்னர் நேற்று (17) கைதுசெய்யப்பட்டார்.

**“ குறித்த நபருக்கு உதவிய குற்றச்சாட்டில் மேலும் இருவரும் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

தோட்டக்காணியில் மறைந்திருந்த நிலையில் நெடுங்கேணி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரை கைதுசெய்ய முயற்சித்தபோது அவர் நஞ்சருந்தியுள்ளார். எனினும், பொலிஸாரால் உடனடியாக கைதுசெய்யப்பட்ட அவர், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை குறித்த நபருக்கு உதவிய குற்றச்சாட்டில் மேலும் இருவரும் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மார்கழி மாதச மகிமை

விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா

பன்னிரண்டு மாதங்களில் மார்கழி மாதத்துக்கென தனிச் சிறப்பு உண்டு; தனி மகிமை உண்டு. இந்து சமயத்துக்கு மட்டுமல்லாது, சகல சமயங்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது இம் மார்கழி மாதம் ஆகும்.

“மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் “என, பகவான் கிருஷ்ணர் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

இந்த மாதம் ஆன்மிகத்தில் தேவர்களுக்கான வைகறை நேரமாகக் குறிப்பிடப்படுகி றது. எனவே, இந்த மாதம் முழுவதும் இறை வழிபாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வருடத்தின் ஒன்பதாவது மாதம் மார்கழி ஆகும். இம்மாதம் தனுர் மாதம் என்று ம் அழைக்கப்படுகிறது. இம்மாதம் முழுவதும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து விட்டு, வாசலில் வண்ணக் கோலம் இட்டு இறைவழிபாடு செய்வது வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது.

ஓசோன் படலமானது பூமிக்கு மிகஅருகில் இம்மாதத்தில் உள்ளது. எனவே, சுத்தமான காற்றை சுவாசித்து, உடல்நலனைப் பேணும் பொருட்டு அதிகாலை வழிபாடு இம்மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. அதிகாலை இறைவழிபாடு பற்றி மாணிக்க வாசகர் திருவெம்பாவையிலும் ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையிலும் போற்றியுள்ளனர்.

மார்கழியில் அதிகாலை வழிபாட்டில் கோவில்களில் வேதங்களுக்குப் பதிலாக திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கன.

இம்மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் என்றும் பதினாறு மார்க்கண்டேயர் பிறந்தார். எனவே மரணத்தை வெல்லும் மாதம் மார்கழி என மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது.

இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனுமஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம் போன்ற விழாக்கள், பண்டிகைகள், விரதமுறைகள் பின்பற் றப் படுகின்றன.

## திருவாதிரை

திருவாதிரை திருவிழா மார்கழியில் பௌர்ணமியை ஒட்டிய திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப் படுகிறது. இவ்விழாவானது சிவபெருமானின் வடிவமான ஆடலரசன் நடராஜருக்கு கொண்டாடப்படுகிறது. திருவாதிரைக் கொண்டே சிவபெருமானு க்கு ஆதிரையன் என்ற பெயர் வழக்கத்தில் உள்ளது. இவ்விழாவானது 1,500 ஆண்டுகள் பழைமையானது.

இவ்விழா பற்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் தங்களது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். திருவாதிரை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, இலங்கையில் மிகவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவின்போது, திருவாதிரைக்களியும் ஏழுகறிக்கூட்டும் இறைவனுக்கு படைக்கப் படுகின்றன. திருவாதிரைக்கு ‘ஒருவாய் களி’ என்பது இவ்விழா பற்றிய பழமொழியாகும். இவ்விரத வழிபாடு மேற்கொண்டால் நடனகலையில் சிறக்கலாம்.

## வைகுண்ட ஏகாதசி

வைகுண்ட ஏகாதசி மார்கழியில் வளர்பி றையில் கொண்டாடப் படுகிறது. வைகுண்ட ஏகாதசியில் திருமால் வழிபாடு மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. எல்லா இந்து மக்களாலும் இத்தினத்தில் விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. திருமாலை வழிபடும் விரதங்களில் இது மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது.

‘காயத்ரிக்கு மிஞ்சிய மந்திரம் இல்லை; ஏகாதசிக்கு மிஞ்சிய விரதமும் இல்லை’ என்பது இவ்விரதம் பற்றிய பழமொழியா கும். இவ்விழாவில் சொர்க்கவாசல் திறப்பு என்பது முக்கிய நிகழ்சியாகும்.

வைகுண்ட ஏகாதசி அன்று துளசி நீரினை மட்டும் அருந்தி பகல் மற்றும் இரவு விழித்திருந்து, திருமால் பற்றிய பாடல்கள் பாடி விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரத வழிபாடு வைகுந்த பதவி என்னும் மோட்சத்தை நல்கும் என்று கருதப்படுகிறது.

## பாவை நோன்பு

ஆயர்பாடியில் கோபியர்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் ஆற்றுக்குச் சென்று நீராடி, மண்ணால் செய்த காத்யாணி தேவியை வழிபட்டு, நல்ல கணவன் கிடைக்க வழிபாடு நடத்தினர். பெண்கள் கடைப்பிடித்த விரதமாயின் இவ்விரதம் பாவை நோன்பு என்று வழங்கலாயிற்று.

ஆண்டாள் பாவை நோன்பை மேற்கொண்டே அரங்கனை கணவனாக அடைந்தாள். பாவை நோன்பின்போது, நெய், பால் முதலியவற்றை உண்ணாமலும், கண்ணுக்கு மையிடாமல், தலையில் மலர் சூடாமல் புறஅழகில் நாட்டம் செலுத்தாமல் இறைநாட்டத்தில் மட்டும் மனதைச் செலுத்தி பாவைநோன்பை மேற்கொண்டார்.

திருமணமான பெண்கள் மகிழ்ச்சியான மணவாழ்வு நீடிக்க வேண்டியும் குடும்ப நலன் வேண்டியும், இவ்விரத்தை மேற்கொள்கின்றனர். பாவை நோன்பு 2000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது.

## திருவெம்பாவை நோன்பு

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழியில் வரும் திருவாதிரைக்கு ஒன்பது நாள் களுக்கு முன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது திருவாதிரையோடு சேர்த்து விரத நாள்கள் மொத்தம் பத்து நாள்கள் ஆகும்.

இந்நோன்பில் அதிகாலையில் எழுந்து நீராடி சிவகாமியுடன் கூடிய நடராஜரை வழிபடுவர். இவ்விரதத்தின்போது ஒரு வேளை அவித்த உணவை மட்டுமே உண்பர். இவ்விரத்தினை பெரும்பாலும் கன்னிப் பெண்கள் கடைப்பிடிப்பர். இவ்விரதத்தின் போது திருவெம்பாவை பாடல்கள் பாடப் படுகின்றன. இவ்வழிபாட்டில் பிட்டு படை க்கப்படுகிறது. இதனால் இவ்வழிபாடு ‘பிட்டு வழிபாடு’ என அழைக்கப்படுகிறது.

## முருகன் படி உற்சவம்

ஆண்டுதோறும் டிசம்பர் 31ஆம் திகதி மலைமேல் உள்ள முருகன் கோவில்களில் படி உற்சவம் என்ற விழா சிறப்பாக நடைபெறுகிறது.

அச்சம் வேண்டாம்; எச்சரிக்கை போதும்

# ஓமிக்ரான் வடிவில் ஆட்டம் ஆரம்பம்

பைஷல் இஸ்மாயில்

**ஓமிக்ரான் குறித்து அச்சப்பட வேண்டியது இல்லை. ஆனால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்**

**காய்ச்சல், வரட்டு இருமல், இரவில் உடல் வியர்த்தல், உடல் வலி போன்ற சாதாரண அறிகுறிகளே இருக்கின்றன**

**ஓமிக்ரான் வேகமாகப் பரவி, முதலாவது இடத்தை கோட்டங்க் மாகாணத்தில் எட்டியுள்ளது**

என்றாவது ஒரு நாள் இந்தக் கொரோனா வைரஸ் தொற்று முடிவுக்கு வந்து விடும் என்று நினைத்து, உலகிலுள்ள மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் தருவாயில், கொரோனா வைரஸ் தன்னுடைய ஆட்டத்தை மீண்டும் ஒரு புதிய வடிவில் ‘ஓமிக்ரான்’ என உருமாறி ஆரம்பித்திருக்கிறது.

உலகின் ஒரு பக்கத்தில் கொரோனா வைரஸின் பாதிப்புக் குறைந்தாலும், மற்றொரு பக்கம் இந்தக் கொரோனா வைரஸ், தன்னுடைய புதிய பரிணாமத்தை மாற்றிக் கொண்டே வருகிறது. இவ்வாறு உருமாறி உருமாறி வரும் கொரோனா வைரஸின் வீரியமும் அதிகமாக இருப்பதால், இறப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகின்றது. இந்த வைரஸ் ஏறத்தாழ 30 பிறழ்வுகளை தன்னிடையே உள்ளடக்கியுள்ளது என்றும் விஞ்ஞானிகள் கூறிவருகின்றனர்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட புதிய கொரோனா வைரஸ் பிறழ்ச்சி B.1.1.529 என்ற வேறுபாட்டுக்கு உட்பட்டது என்று தெரிவித்த உலக சுகாதார நிறுவனம், அதற்க ‘ஓமிக்ரான்’ என்ற கிரேக்க எண்ணின் பெயரைச் சூட்டியுள்ளது.

இந்த வைரஸ், நவம்பர் மாதம் எட்டாம் திகதி தென்னாபிரிக்காவில் கோட்டங்க் மாகாணத்தில் முதலில் கண்டறியப்பட்டது. இது முற்றிலும் மாறுபட்ட தனித்துவமான, உருமாறிய வகையில் உருவாகி வேகமாகப் பரவத் தொடங்கியது.

இங்கிலாந்து உட்பட பல ஐரோப்பிய நாடுகளையும் தாண்டி பெல்ஜியம், போட்ஸ்வானா, ஹொங்கொங், இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் ஓமிக்ரோன் வைரஸின் தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்த வைரஸ், லேசான அறிகுறிகளையே வெளிப்படுத்துகின்றது. இதன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், வரட்டு இருமல், இரவில் உடல் வியர்த்தல், உடல் வலி போன்ற சாதாரண அறிகுறிகளே இருக்கின்றன.

இதுவரை கண்றியப்பட்ட கொரோனா வைரஸ் வகைகளிலேயே இதுதான் மிகவும் ஆபத்தான வகை வைரஸ் என கருதப்படுகிறது. இதுவரை 57 நாடுகளுக்கு பரவியுள்ளதாகவும் மேலும் பல நாடுகளுக்கு இன்னும் பரவக் கூடிய ஆபத்து இருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளதுடன் இது குறித்து உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனினும், டெல்டா வைரஸின் பாதிப்பை விடவும் குறைவான பாதிப்பே ஓமிக்ரானால் ஏற்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெல்டா வைரஸை விட, ஓமிக்ரான் வேகமாகப் பரவி, முதலாவது இடத்தை கோட்டங்க் மாகாணத்தில் எட்டியுள்ளது. டெல்டா வைரஸ் போலவே இதன் தாக்கம் பல மாதங்களுக்கு முன்பே பரவத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, ஓமிக்ரான் வைரஸ் மற்றோர்அலையா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ளது.

இதற்கான சாத்தியக்கூறு அதிகமாக இருப்பினும், இறப்புகள் பற்றி இன்னும் தகவல்கள் வெளியிடப்படவில்லை. இதுவரை பதிவாகியுள்ள தகவலின்படி நோய்த்தொற்றின் பாதிப்பு குறைவாக உள்ளது. அந்த மாகாணத்தில் ஓமிக்ரோன் வைரஸால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில், இறப்பவரின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவே உயர்ந்துள்ளது.

இதுவரை குழந்தைகளிடம் இருந்து இத்தொற்று கண்டறியப்படவில்லை எனவும் இந்த வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் இவ்வாறுதான் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிர சோர்வு, தசை வலி, தொண்டை அரிப்பு, வரட்டு இருமல் என அதிகளவிலும் ஒருசிலருக்கு அதிகளவில் காய்ச்சலும் தென்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் முழுமையாக தடுப்பூசி போட்டவர்களுக்கும் இத்தொற்று பரவுகிறது. எனினும் தடுப்பூசிகள் அனைத்து மாறுபட்ட தீவிர கொரோனா தொற்று நோயிலிருந்தும், இறப்பிலிருந்தும் பாதுகாக்கிறது. கொரோனா அலைகளில் கடைப்பிடித்தது போல, விமான போக்குவரத்து மூலம் வெளிநாட்டவர் வருகையை கண்காணிப்பது, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைப்பிடித்தல், கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்தல், பொது இடங்களில் கூட்டமாக கூடுவதை தவிர்த்து தனிமனித இடைவெளியை கடைப்பிடிப்பது போன்ற நடவடிக்கைகளை செயற்படுத்துவது நல்லது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூஸ்டர் தடுப்பூசி கட்டாயம் செலுத்த வேண்டுமா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் தற்போது எழுந்து காணப்படுகின்றது. குறிப்பாக, தடுப்பூசி போட்ட பிறகும் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால், அது திருப்புமுனை தொற்று எனப்படும். பூஸ்டர் டோஸ்கள் செலுத்திக் கொள்வதால் அதிக அளவிலான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். இது நோய்க்கு எதிராகவும், பரவும் தன்மைக்கு எதிராகவும் பாதுகாப்பாக இருக்கும்.

முதல் நிலை, இரண்டாம் நிலை தடுப்பூசி செலுத்தியவர்கள், அடுத்த நிலை பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்வதனால் எம் உடலுக்கு பாதுகாப்பு கிடைக்கின்றது என்று சர்வதேச மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓமிக்ரான் பாதிப்பு இலங்கையில் வராமல் தடுக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றனர். ஓமிக்ரான் வைரஸ் குறித்து யாரும் அச்சப்பட வேண்டியது இல்லை. ஆனால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.






# உலக கலாசாரங்களுக்கு இடையிலான புத்தாக்க விருது பெற்ற இலங்கையர்

அதிரன்

துபாய் எக்ஸ்போ 2020 இன் ஜேர்மன் பெவிலியனில் அண்மையில், சகிப்புத்தன்மை மற்றும் உள்ளீர்ப்பு என்னும் கருப்பொருளில் நடைபெற்ற சர்வதேச விருது வழங்கும் விழாவில், உலகளாவிய ரீதியில் அடிமட்ட சமூகங்களோடு (Grass root communities) செயற்படும் பத்து செயற்றிட்டங்கள், பெரும் மதிப்புடைய கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை (Intercultural Innovation) ஆகிய விருதுக்கான இறுதி வெற்றியாளர்களாக பெயரிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு, 120 நாடுகளில் இருந்து 1,100 இற்கு மேற்பட்டவிண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், தேர்வு செயல்முறை மிகவும் போட்டித்தன்மையுடன் இருந்ததுடன் விருது பெற்ற பத்து அமைப்புகள் 200,000 டொலர் நிதி மானியத்தை பகிர்ந்து கொண்டனர்.

நிதியுதவிக்கு கூடுதலாக, நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணி, பி.எம்.டப்ளியூ குழுமத்தின் திறன்-கட்டுமானம் மற்றும் வழிகாட்டுதலின் மூலம் கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருதியைப் பெறுபவர்கள், அக்சென்ச்சர் ஆதரவுடன் தங்கள் திட்டங்களை விரிவுபடுத்தவும், பிற சூழல்களுக்குப் பிரதிபலிக்கவும் உதவுவார்கள். சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இளம் தலைவர்களுக்கான திறன் மற்றும் அறிவுப் பகிர்வு தளமான கலாசார தலைவர்கள் வலையமைப்பில் சேரவும் அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

குறித்த விருதுகளில் இரண்டை ஆசியாக் கண்டத்தில் இருந்து இலங்கை, இந்தியா ஆகிய நாடுகள் பெற்றுகொண்டன. இலங்கையிலிருந்து இளையோர் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் ஒன்றியம் (SYLC), ட்றீம்ஸ் பேஸ் அக்கடமி ஆகியவை பெரு மதிப்பு உடைய, கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருதை சர்வதேச அரங்கில் தன்னகத்தே பெற்று, எமது மண்ணிற்கு பெருமை ஈட்டித்தந்துள்ளன.

இளையோர் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் ஒன்றியம், ட்றீம்ஸ் பேஸ் அக்கடமியின் இணை-நிறுவுனர் கிஷோத் நவரெட்ணராஜா, இவ் விருதை அமைப்பின் சார்பாகப் பெற்றுக்கொண்டார். அவரிடம் இது பற்றி வினவிய போது, "இலங்கையில் அடிமட்ட சமூகங்களுக்கு இடையே காணப்படும் முரண்பாட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இந்தப் பொறிமுறை, தொழில்நுட்பத்தின் உதவியுடன் அடிமட்ட சமூகங்களுக்கும் உரிய தரப்பினருக்கும் இடையிலான இடைவெளியை நிவர்த்தி செய்து, அப்பிரச்சினை தீர்வை நோக்கி நகரும் வரையில் பொறிமுறை தொழிற்படுவதன் மூலம், வன்முறையான முரண்பாட்டைத் தவிர்ப்பதாக அமைகின்றது" எனத் தெரிவித்தார்.

**புதுமை விருதை சர்வதேச அரங்கில் தன்னகத்தே பெற்று, எமது மண்ணிற்கு பெருமை ஈட்டித்தந்துள்ளன**

**சர்வதேச சமூகத்தை மேம்படுத்த தொடர்ந்து ஒத்துழைத்து வருகின்றன**

**முயற்சிகளை வலுப்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்தை மேம்படுத்த தொடர்ந்து ஒத்துழைத்து வருகின்றன**

**ஒரு நிறுவனமாக நம்மை முன்னோக்கி நகர்த்தும் மதிப்புகள் இவை. முன்னேற்றத்திற்கு ஒருங்கிணைப்பு தேவை என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்**

நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணி (UNAOC) மற்றும் பி.எம்.டப்ளியூ இணைந்து ஆக்சென்ச்சர் இன் ஆதரவுடன், வழங்கப்படும் கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருது ஆனது, கலாசாரங்களுக்கு இடையிலான தொடர்பாடல் மற்றும் புரிதலை ஊக்குவிப்பதோடு சமாதானம், கலாசார பன்முகத்தன்மை, உள்ளூர் சமூகங்களுக்கு பங்களிக்கும் அடிமட்ட சமூகங்களோடு செயற்படும் முயற்சிகளை ஆதரிக்கிறது.

விருதுகள் வழங்கும் விழாவில், நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணியின் உயர் பிரதிநிதியும் ஸ்பெயினின் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான எச்.இ.மிகுவல் ஏஞ்சல் மொரடினோஸ், பி.எம்.டப்ளியூ குழுமத்தில் மனித வளங்களுக்குப் பொறுப்பான பி.எம்.டப்ளியூ குரூப் இன் நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி இகா ஹோர்ஸ்ட்மேயர், இந்த விழாவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநில அமைச்சர், எக்ஸ்போ 2020 துபாய் பீரோவின் நிர்வாக இயக்குநர் மற்றும் துபாய் எக்ஸ்போ 2020 இன் உயர் குழுவின் உறுப்பினரான ரீம் இப்ராஹிம் அல் ஹாஷிமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருது (IIA) தனது 10ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில், நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணி (UNAOC) மற்றும் பி.எம்.டப்ளியூ குழுமம் ஆகியவை பன்முகத்தன்மை, சமத்துவம் கொண்ட சமூகங்களை வளர்க்கும் அடிமட்ட சமூகங்களோடு வேலை செய்யும் முயற்சிகளை வலுப்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்தை மேம்படுத்த தொடர்ந்து ஒத்துழைத்து வருகின்றன " என்று மொரடினோஸ் தனது தொடக்க உரையின் போது கூறினார்.

பி.எம்.டப்ளியூ குழுமத்தில் மனித வளங்களுக்குப் பொறுப்பான நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி இகா ஹோர்ஸ்ட்மேயர் கருத்துத் தெரிவிக்கும்போது, கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருதின் மூலம், புதுமையான வழிகளில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டங்களை நாங்கள் வலுப்படுதுகின்றோம். நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணி மற்றும் தனியார் துறைக்கு இடையே எப்போதும் வளர்ந்து வரும் இந்த ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களை முன்னிட்டு, நாங்கள் மிகவும் பெருமிதம் கொள்கிறோம். இது உலகெங்கிலும் உள்ள சமூக கண்டுபிடிப்பாளர்களின் வேலையைப் பெருக்கி வலுப்படுத்துகிறது. அவர்களின் அர்ப்பணிப்பும் தொலைநோக்கு சிந்தனையும்தான் நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணி -பி.எம்.டப்ளியூ குழுமத்துக்கு இத்தகைய மதிப்பையும் தாக்கத்தையும் கொடுத்துள்ளது. கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருதானது, பன்முகத்தன்மை, சகிப்புத்தன்மை மற்றும் குறிப்பாக, ஆக்கப்பூர்வமான வழியில் சேர்ப்பதை ஊக்குவிக்கும் நபர்களையும் திட்டங்களையும் கௌரவிக்கிறது. ஒரு சமூகமாகவும் ஒரு நிறுவனமாகவும் நம்மை முன்னோக்கி நகர்த்தும் மதிப்புகள் இவை. முன்னேற்றத்திற்கு ஒருங்கிணைப்பு தேவை என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். பி.எம்.டப்ளியூ குழுமம் இதைத்தான் குறிக்கிறது. நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணி உடன் இணைந்து, மதிப்பு வாய்ந்த உரையாடலுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்கிறோம்" என்று கூறினார்.

எமது நாட்டின் அடிமட்ட சமூகங்களுக்கு இடையே காணப்படும் முரண்பாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இளைய தலைமுறையினரை இளையோர் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் ஒன்றியம் மற்றும் ட்றீம்ஸ் ஸ்பேஸ்யினர் டிஜிற்றல் வித்துரைப்பாளர்கள் வலையமைப்பு செயற்றிட்டத்தில் இணைய அழைக்கின்றனர். இணைய விரும்புபவர்கள் www.sylcsl.org என்னும் இணைய தளத்துக்குச் செல்வதன்மூலம் இணைந்து கொள்ளலாம்.






குழந்தைகளின் ஆரோக்கியத்தை கெடுக்கும்

# அழகிய பொம்மைகள்

## குழந்தைகளுக்கு பொம்மைகளைத் தேர்வு செய்வது எப்படி?

என். ஹரன்

ஒவ்வொரு குழந்தையும் பெற்றெடுத்த தாய்க்கு மட்டும் சொந்தமானதல்ல; இந்த உலகுக்கே சொந்தமானதாகும். அதாவது, ஒவ்வொரு குழந்தையும் நாட்டின் தேசிய செல்வமாகவும் சொத்தாகவும் அமைந்துள்ளது.

பிறக்கின்றகுழந்தைஆணாகவோ பெண்ணாகவோ, பெற்றோரின் ஆசைகளை நிறைவேற்றுவதாக அமைந்தாலும் சட்டம் ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. அத்துடன், ஆரோக்கியத்தை கருத்தில் கொள்ளும் பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்தே உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அமைப்புகள், குழந்தைகள், சிறுவர் நலன் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு, பல உள்கட்டமைப்புகளை செயற்படுத்தினாலும், அந்த அமைப்புகளின் தடைகளையும் மீறி, குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கும் உயிருக்கும் உலைவைக்கும் வகையில் அவர்களின் கைகளைச் சென்றடைந்து கொண்டே இருக்கின்றன.

இன்று, குழந்தை வளர்ப்பு என்பது பாரம்பரிய முறையில் இருந்து விலகி, நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்துக்குள் பிரவேசித்ததுள்ளது. அன்று, குழந்தை பிறந்து நான்கு, ஐந்து வயது வரை, பாட்டியின் அரவணைப்பில் இருக்கவும் அக்காலத்தில் இயற்கையான பொருட்களில் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களை வைத்துக் கொண்டுமே குழந்தை வளரும்.

குழந்தைப் பருவத்தில் செய்யப்படுகின்ற செயல்கள், பேசுகின்ற பேச்சுகள் கேட்கின்ற கேள்விகள் - பதில்கள் போன்றவை காரணமாக, உடல் உள ஆரோக்கியம் பேணப்பட்டு, குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது.

இன்று, இவற்றுக்கு எதிர்மறையாக பிள்ளைகளுக்கு அழகிய பொம்மைகளையும் கவர்ச்சியான விளையாட்டுப் பொருட்களையும் கொடுத்துவிட்டு கணவனும் மனைவியும் தமது வேலைகளில் மூழ்கி விடுகிறார்கள். இதற்கும் மேலாக ஒரு படி சென்று, அலைபேசிகளில் குழந்தைகளைக் கவரக்கூடிய விளையாட்டுகளை பதிவிறக்கி ,அவற்றைக் குழந்தைகளிடம் கொடுத்து விட்டு, தாயும் தந்தையும் விலகி விடுகின்றார்கள். இந்த இரண்டு விடயங்களிலும் தங்கியுள்ள எதிர்மறை விளைவுகளைப் பற்றி சிறிதளவாவது இவர்கள் எண்ணிப் பார்ப்பது கிடையாது.

ஏதோ குழந்தை அழாமல் அடம்பிடிக்காமல் விளையாடினால் தூங்கினால் போதும் என்றபடி இருக்கிறார்கள் இன்றைய பெற்றோர்கள்.

பல்வேறு மருத்துவ ஆய்வின் வழியாக, குழந்தைகள் விளையாடும் அழகிய விளையாட்டுப் பொருட்களின் உருவங்களில் பலதரப்பட்ட நோய்கள் வரவழைக்கும் இரசாயனங்களும் அடங்கும் என அமெரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'மைக்ரோ' என்ற இதழில் கூட்டாக வெளியிட்டுள்ளார்கள். ஆய்வின்படி, விளையாட்டுக்கப் பயன்படுத்தும் பொம்மைகள், நீரில் வைத்து விளையாடும் பொம்மைகள் என்பவற்றில் உடலுக்கும் மூளைக்கும் தீங்கான நிறச் சாயம் அடங்கியுள்ளது என உறுதிப்படுத்துகின்றனர்.



குறிப்பாக, பொம்மைகளைத் தயாரிக்க பயன்படுத்தப்படும் தரக்குறைவான பொருட்களில் கிருமிகள் தங்கி வாழக் காரணமாக அமைவதுடன் நிறப்பூச்சு கழுத்து , வாய் ,உதடு, நாக்கு போன்றவை ஊடாக உடலுக்குள் சென்று பாரிய ஆரோக்கிய கேடுகளை உண்டாக்கும் என்று அறிவித்திருந்தனர்.

பொம்மைகளுக்கு ஒரு முக்கியமான செயற்பாடு உள்ளது. பொம்மைகளின் உதவியுடன், குழந்தை உலகைக் கற்றுக்கொள்கிறன. ஆனால் ஒவ்வொரு பொம்மையும் பயனுள்ளதாக இல்லை. ஏன்?

வீடுகளைச் சுத்தம் செய்யத் தொடங்கியவுடனே, அறையின் நடுவில் ஒரு மலைபோல பொம்மைக் குப்பைகள் குவியத் தொடங்குகின்றன. பயமுறுத்தும் வண்ணங்களில், பிடிக்காத பட்டுப் பிராணிகள், நம் பெற்றோரின் கண்களை வெட்கப்படுத்தும் வளைவு வடிவங்களுடன் அரை நிர்வாண பார்பிகள், பாழடைந்த மின்மாற்றிகள் . .. உங்கள் மூன்று வயது மகள், குழந்தை இல்லாத உறவினரின் வருகையின் விளைவாக தவழும் பொம்மையின் மகிழ்ச்சியான உரிமையாளராகின்றனர்.

இன்று குழந்தைகளுக்கான பொருட்களின் கடைகள், முற்றிலும் பயனற்ற பொம்மைகளால் மூழ்கியுள்ளன. அவை குழந்தையின் வளர்ச்சிக்கு பங்களிக்காது. அதே நேரத்தில், இயற்கையாகவே, உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புக்குக் கவனத்தை ஈர்க்கவும், அதன் அவசியத்தை நுகர்வோரை நம்பவைக்கவும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறார்கள். அனுபவமற்ற பெற்றோர்கள் தங்கள் அன்பான குழந்தைக்கு இந்த அல்லது அந்த பொம்மை உண்மையில் தேவையா என்பதை தீர்மானிக்க மிகவும் கடினமாக இருக்கும்?

தீங்கு விளைவிக்கும் பொம்மைகளிலிருந்து பயனுள்ள பொம்மைகளை எப்படி வேறுபடுத்தலாம் என்பதை தீர்மானிக்க முயற்சிப்போம்.

இயற்கைக்கு மாறான 'அமில' வண்ணங்களின் மென்மையான பொம்மைகள், விலங்குகள், பொம்மைகளின் முகத்தில் ஒரு வகையான வெளிப்பாடு இல்லை; வெளிப்படையாக ஆக்ரோஷமான அரக்கர்களைக் குறிப்பிடாமல், குழந்தைக்கு பயனளிக்க முடியாது. ஒரு பெரியவரின் உதவியின்றி குழந்தை அதை எளிதாகக் கையாளக்கூடிய அளவுக்கு பொம்மை இருக்க வேண்டும். அவை, குழந்தையின் உயரத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக்கூடாது.

சிக்கலான கட்டுப்பாட்டு அமைப்பைக் கொண்ட ஒரு பொம்மை, குழந்தை தானே கண்டுபிடிக்க முடியாதது. அது, குழந்தையின் வளர்ச்சிக்கு நடைமுறையில் பயனற்றது.

உங்கள் குழந்தையின் வாழ்க்கையின் முதல் மாதங்களிலிருந்தே, அவருக்கு அன்பளிப்பை வழங்குவதற்கு முன் ,உங்களுடன் கலந்தாலோசிக்க அன்பானவர்களை சமாதானப்படுத்த முயற்சிக்கவும். இது பல மனக்கசப்புகள் மற்றும் தவறான புரிதல்களைத் தவிர்க்கும்.

மென்மையான பொம்மைகள் குழந்தையின் உயரத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பெரிய - கரடி பொம்மையொன்று குழந்தையின் கையை விடப் பெரியதாக இருக்கக்கூடாது. சிறிய - பொம்மையொன்று குழந்தையின் உள்ளங்கையை விடச் சிறியதாக இருக்கக்கூடாது. இயற்கையான, சிறந்த - கரிம பொருட்கள், இயற்கை வண்ணங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட விலங்குகளைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது.

குழந்தைக்கு ஒளி, ஒலி சமிக்ஞையின் வடிவத்தில் வெகுமதி அளிக்கப்படுகிறது. அது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அதாவது, அறிவாற்றல், ஆராய்ச்சி செயற்பாடு ஒரு வகையான நிபந்தனைக்குட்பட்டதாக மாற்றப்படுகின்றது. அதிகப்படியான நிறம், ஒலி தூண்டுதல்கள் அதிகப்படியான உற்சாகம் தீமை தருவனவாகும். குழந்தை பருவத்திலிருந்தே பொத்தான்களைக் கையாள அழுத்திப் பழகிய குழந்தை, மிகவும் தீவிரமான அறிவுசார் முயற்சிகள் தேவைப்படும் போது, அதைச் செய்வதற்கு மறுக்கலாம்.

சில பொம்மைகள் உடலில் அதிகளவு ஈயம் சேர்வதைத் தூண்டுகிறது. இரத்த சோகை, மூளை நோய்கள், சிறுநீரகப் பாதிப்பு, செரிமானக் கோளாறுகள், கவனம் மற்றும் இயக்கங்களின் ஒருங்கிணைப்பு கோளாறுகள், எலும்பு திசுக்களின் அழிவு என்பன தரமற்ற பொம்மைகளின் பாவனையின் விளைவால் ஏற்படலாம்.

ஒரு குழந்தைக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்கள் எவை என்பதைப் புரிந்து கொள்ள, வண்ணப்பூச்சில் ஈயத்தின் செறிவு, செயற்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

குழந்தை பொம்மையுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதை அறிந்து கொள்வதும் முக்கியம். அதை அதன் கைகளால் தொட்டு, வாயில் எடுத்து, மெல்லுவதற்கு முயற்சிக்கும்.

பொம்மைகளை உருவாக்குவதன் முக்கிய நோக்கம், அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துடன் பழகுவது, குழந்தைகளை வளர்ப்பது மற்றும் கற்பிப்பது. எனவே, பெரியவர்கள் இதை அடிப்படையாகக் கொண்டு, பொம்மைகளை வாங்க வேண்டும். இளைய தலைமுறையினரின் நாகரிகம், கௌரவம், விருப்பத் தேர்வுகளின் அடிப்படையில் அல்ல. அவற்றின் உற்பத்தியில் உயர்தர பொருட்களைப் பயன்படுத்தும் நன்கு அறியப்பட்ட நிறுவனங்களின் தயாரிப்புகளை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும் மற்றும் மறந்துவிடாதீர்கள்.

## விவசாயிகளை பாடாய்ப்படுத்தும் படைப்புழு

# பசி அடங்காத படைப்பு



வ. சத்திவேல்
shagthivel@gmail.com





மட்டக்களப்பு மாவட்டம் வேளாண்மைச் செய்கைக்கு மாத்திரமின்றி மேட்டுநிலப் பயிர்செய்கைக்கும் பெயர்போன மாவட்டமாகும். குறிப்பாக, படுவாங்கரை பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள வயல் நிலங்களில், வேளாண்மைச் செய்கையும் மேட்டு நிலங்களில் சோளன், நிலக்கடலை, கௌபி, பயறு, மரவள்ளி உள்ளிட்ட பயிரினங்களையும் அப்பகுதி விவசாயிகள் மேற்கொள்வது வழக்கம்.

ஐப்பசி மாதம் முதல் மாசி மாதம் வரையிலான மாரி காலத்தில், அப்பகுதி விவசாயிகள் பெரும்போகச் செய்கையையும் சித்திரை மாதம் முதல் ஆனி -ஆவணி மாதம் வரையிலான காலப்பகுதியில் குளத்து நீரை நம்பி, சிறுபோக வேளாண்மைச் செய்கையையும் மேற்கொள்வது வழங்கம்.

இந்நிலையில், சிறுபோக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படும் காலத்தில், மேட்டு நிலப் பயர் செய்கை மேற்கொள்வது மிகக்குறைவாகும். ஆனால், மழையை நம்பி மேற்கொள்ளும் வேளாண்மைச் செய்கைக் காலத்தில் படுவாங்கரைப் பகுதியில் ஒரு சிறிய அளவிலேனும் நிலத்தில் இடம் இல்லாமல் அனைத்திலும் மேட்டுநிலப் பயிரினங்கள் நடப்படுவது வழக்கம்.

அதுபோல, இவ்வருடமும் விவசாயிகள் மேட்டுநிலப் பயிச் செய்கை மேற்கொண்டுள்ள போதிலும், அதற்கு இவ்வருடம் செயற்கை உரவகைகள் முற்றாக அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டுள்ள இந்நிலையில், குறிப்பாக மேட்டநிலப் பயிர்ச் செய்கையில் சோளன் பயிர்களில் படைப்புழுவின் தாக்கம் வியாபித்துள்ளதால், விவசாயிகள் மத்தியில் வேளாண்மைச் செய்கையைப்போல், தமது சோளன் செய்கையையும் கைவிடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தமக்கு புத்தி தெரிந்த காலத்திலிருந்து, இன்றுவரை விவசாயத்தையே நம்பி தமது வாழ்வைக் கொண்டு நடத்தும் தமக்கு, தமது மேட்டுநிலப் பயிர் செய்கையிலும் பாரிய தாக்கம் வரும் என்பதை கனவில்கூட அவர்கள் நினைத்திருக்கவில்லை.

### என்ன தாக்கம்?

இலைகளிலும் பூக்களிலுமாக வெளநாட்டில் இருந்துவந்த புடைப்புழுவின் தாக்கத்தால், சோளன் பயிர்ச் செய்கையை அடியோடு கைவிட வேண்டிய நிலைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சோளன் பயர்ச் செய்கையில் இவ்வருடம் என்றுமில்லாத அளவுக்கு படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தமது வாழ்வாதாரத்தை அடியோடு இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

என்றுமில்லாத அளவிற்கு படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதனால் தாம் இப்பயிருக்கு முதலீடு செய்த பணத்தைக்கூட அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் பெறமுடியாதுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வங்கிகளில் விவசாயக் கடன்களைப் பெற்றும், தனி நபர்களிடமிருந்து வட்டிக்குப் பணம் வாங்கியும், தம்மிடமிருந்த சிறிய சிறிய தங்க நகைகளை அடகு வைத்தும், இதர கடன்களைப் பெற்றும், இவ்வாறு பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பயிரினங்கள் விளைந்து, அவற்றின் விளைச்சலை விற்று கடன்களை அடைப்பதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், அது தமக்கு எட்டாக்கனியாக மாறி, மீண்டும் கடன் படும் நிலைக்குத் தள்ளியிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் படைப்புழுவின் தாக்கம் தொடர்பாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது: பசி அடங்காத ஆக்கிரமிப்புப் புழுக்கள், 2016 இல் நைஜீரியாவில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆபிரிக்காவில் 44 நாடுகளில் பரவியுள்ளன. 2018 மே மாத்தில் இந்தியாவுக்கும் பரவியுள்ளது. Full armyworm என அழைக்கப்படும் இப்புழுக்கள் Spodoptera frugiperda எனும் அந்துவின் குடம்பிப் பருவம் ஆகும்.

அனுமதியில்லாது கொண்டு வரப்படும் செடிகள், மூலம் இலகுவாக இப்புழுக்கள் நம் நாட்டிற்குள் வரலாம். இந்த அந்துவானது ஒரே நாளில் 100 கிலோ மீற்றர் தூரம் வரை பறக்கும் வல்லமையைக் கொண்டுள்ளதால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு காற்றின் மூலம் வருவதற்கு அதிகளவான வாய்ப்புகள் உள்ளன.

இப்புழுவின் தலையில் தலைகீழான Y எழுத்து போன்ற வடிவம் காணப்படும். ஊடலெங்கும் கொப்புளங்கள் போன்று வீங்கிக் காணப்படும். மேலே இருந்த பார்க்கும்போது ஒவ்வொரு முண்டத்திலும், இவ்வாறு நான்கு கொப்புளங்களைக் காணலாம். கடைசி உடல் முண்டத்துக்கு முன்னால் உள்ள துண்டத்தில் இக்கொப்புளங்கள் நான்கு மூலைகளில் அமைந்திருக்கும்.

சோளத்தின் இலைகளில் துளைகளை ஏற்படுத்தி முதலில் உண்டு, பின்னர் அது கிளை பிரிந்தது போன்ற நீண்ட துளை வரும் வரை உண்ணும். இளம் பொத்திகளின் மத்தியிலும் உண்ணப்பட்டிருப்பதைக் காணலாம்.

இப்புழு விரும்பும் உணவுகளாக சோளம், கரும்பு, நெல், மரக்கறிப் பயிர்கள், உட்பட 100 இற்கும் அதிகமான தாவரங்களை உண்ணும்.

### எவ்வாறு கட்டுப்படுத்துவது?

உலகெங்கும் தற்போதைக்கு வரை, கட்டுப்படுத்துவது பற்றி ஆராயப்படுகின்றது. இதற்கு நிச்சயமற்ற முறை இல்லை. பூச்சி நாசினிகளுக்கு எதிராக விரைவாக விருத்தியடையும் தன்மை கொண்டது. உயிரியல் கட்டுப்பாட்டில் பலன் கிட்டும்வரை பாதுகாப்பாக இருப்பது முக்கியமாகும். கண்டவுடன் கையால் பிடித்து அழிக்க வேண்டும்.

இதுபற்றி விவசாயிகள் உரிய விவசாயப் பேதனாசிரியர்களைத் தொடர்பு கொண்டு விளக்கங்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், இந்த வருடம் 1,050இற்கு மேற்பட்ட ஹெக்டயரில் சோளன் பயிரிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது இவ்வாறு இருக்க, சோளன் செய்கையில் படைப்புழுவை முகாமைத்துவம் செய்தலும் கட்டுப்படுத்தலும் தொடர்பான ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் அண்மையில் சில்லிக்கொடியாறு கிராமத்தில் நடைபெற்றுள்ளது. இதன்போது விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டு அப்பகுதி விவசாயிகளுக்கு எதிர்கால திட்டங்கள், படைப்புழு முகாமைத்துவம், அதன்கட்டுப்பாடுகள் தொடர்பாகவும் விளக்கங்களை வழங்கியுள்ளனர்.

எனினும், கடந்த வருடத்திலும் விவசாய ஆராய்ச்சியாளர்கள் பலர் கலந்து கொண்டு, மட்டக்களப்பில் படைப்புழு தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். ஆனாலும், இன்றுவரை படைப்புழுவின் தாக்கத்தை விவசாயிகள் கட்டுப்படுத்த முடியாமல் தலைவிரித்தாடும் நிலைமைக்கே இட்டுச் சென்றுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்கை உரம் இல்லாத நிலையிலும், சோளன் செய்கையில் ஈடுபட்டு படைப்புழுவின் தாக்கத்தை எதிர்கொண்டு, பெரும் நட்டத்தைச் சந்தித்துள்ள விவசாயிகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் என, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.





## வடக்கில் அதிகரிக்கும் ரயில் விபத்துகள்:

# காலன் கடவைகள்

க. அகரன்

**போக்குவரத்து வசதிகள், இன்று அசுர வேகத்தில் முன்னேற்றம் கண்டு வரும் நிலையில், அதன் காரணமாகப் பறிக்கப்படும் உயிர்களும் அதிகரித்துச் செல்கின்றன. இலங்கையில் நாளொன்றுக்கு 15–20 பாரிய விபத்துகள் பதிவாகின்றன. இவ்வாறான விபத்துகளில் ரயில் விபத்துக்கள் பெரும் பதிப்பை ஏற்படுத்துவனவாக அமைந்துவிடுகின்றன.**




குறிப்பாக, பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஏற்படும் விபத்துகளே அதிகமாகச் சம்பவிக்கும் நிலையில், வடக்கில் இவ்வாறான விபத்துகள் அதிகரித்துச் செல்கின்றன.

இலங்கையில், ரயில் பாதைகளின் மொத்த நீளம் 1,447 கிலோ மீற்றராகக் கணக்கிடப்பட்டுள்ள நிலையில், வடக்கில் 265 கிலோ மீற்றராக ரயில் பாதைகள் உள்ளன. இந்தச் சிறிய அளவைக்கொண்ட பாதைக்குள்ளேயே அதிகளவான விபத்துகள் அண்மைய நாள்களில் பதியப்பட்டுள்ளமை, ஏற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய சம்பவங்களாக உள்ளன.

172 பிரதான ரயில் நிலையங்களையும் 161 துணை நிலையங்களையும் கொண்டுள்ள ரயில் பாதைகளில், ரயில் நிலையங்களுக்கு இடையில் குறைந்தளவான இடைவெளிகளே காணப்படுகின்றபோதிலும், இவ்வாறாக ரயில் கடவைகளுக்கு இடையில் விபத்துகள் இடம்பெறுவதற்கு வாய்ப்பாகுவதாகக் கூறப்படுகின்றது.

வடக்கில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில், ரயில் பாதைகள், இந்திய அரசின் துணையுடன் புனரமைப்புச் செய்யபட்டுள்ளன. இவை 90 களுக்கு முன்னர் இருந்த ரயில் பாதைகளின் வரைபடத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் கூட, புதிய பாதைகள் பல பகுதிகளில் சுமார் ஐந்து அடிக்கும் உயரமாக அமைக்கப்பட்டுள்ளது.

உயரமாக அமைக்கப்பட்ட பாதைகளால், கிராமங்களுக்கு செல்லும் பூர்வீக பாதைகள் மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டதுடன் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தும் பாதிப்படைந்தது. இதற்குமப்பால் பூர்வீகமாக மக்கள் தமது கிராமங்களுக்கான போக்குவரத்து மார்க்கமாக வைத்திருந்த பாதைகள், தமது ஆளுகைக்குள் இல்லை எனவும் மக்களால் சுயமாக அனுமதியின்றி போடப்பட்ட பாதைகள் என்ற கருத்தையும் முன்வைக்கும் ரயில்வே திணைக்களமானது, குறித்த பாதைகளுக்கு காவல் கடமைக்கு உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாது என்றும் ரயில் கடவைகளை அமைக்க முடியாது எனவும் தெரிவிக்கின்றது.

எனினும், விபத்துகளைத் தவிர்ப்பதற்காக பொலிஸார், பல இடங்களில் தமது திணைக்களத்தினூடாக உத்தியோகத்தர்களை நாள் சம்பள அடிப்படையில் நியமித்துள்ளனர். இவ்வாறாக, இலங்கையில் 2,638 ரயில் கடவை காப்பாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களில் வடக்கு, கிழக்கில் 415 பேர் உள்ளதாக, ரயில்வே கடவை காப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் ரோகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார். இந்நிலையில், இலங்கையில் 2017 ஆம் ஆண்டு தகவலின் அடிப்படையில், 684 பாதுகாப்பற்ற ரயில்வே கடவைகள் உள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்திருந்தது.

புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டபோதிலும், அதனூடாக ஏற்படும் விபத்துகள் மற்றும் மக்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய பொறுப்பும் கடமையும் தேவையும் ரயில் திணைக்களத்துக்கு உரியது என்பதைத் தட்டிக்கழித்து விட முடியாது.

இதுவரை காலப்பகுதியில், வடக்கில் ரயிலுடன் மோதுண்ட சுமார் 60 இற்கும் அதிகமான விபத்துகள் சம்பவித்துள்ளன எனச் சில புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ள நிலையில் 25 உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான உயிரிழப்புகள், விபத்துகள் அதிகளவில் வவுனியா பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளதுடன் அடுத்ததாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள், அதிகளவில் வடக்கில் காணப்பட்டபோதிலும் வவுனியா, ஓமந்தை பிரதேசத்தில் இருந்து மன்னகுளம் வரையான பகுதியில், அதிகளவான பாதுகாப்பற்ற கடவைகள், புதிய பாதை புனரமைப்பின் பின்னர் காணப்படுகின்றமை துரதிர்ஷ்டமாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இவற்றுக்கு அப்பால், புதூர் போன்ற காடு சார்ந்த பிரதேசங்களில் சூரிய மின்கலத்தால் உருவாக்கப்பட்ட சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில், சிலவேளைகளில் அவை செயற்படாது போகின்ற நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமையால், கடந்த இரு வருடங்களுக்கு முன்னர்,இரண்டு இளைஞர்கள் உழவியந்திரத்தில் ரயில் கடவையை கடக்க முற்பட்டபோது, ரயிலுடன் மோதுண்டு பலியாகியிருந்தனர். அதன் பின்னரான காலப்பகுதியிலும், தாண்டிக்குளம் பகுதியில், ரயிலுடன் ஒட்டோ மோதுண்டு, இளம் குடும்பஸ்தர் பலியாகியிருந்தார். அது மாத்திரமின்றி, அண்மையிலும் தாண்டிக்குளத்தில் ஓட்டோ, ரயிலுடன் மோதுண்ட போதிலும் தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

தாண்டிக்குளம் ரயில் கடவை மிகவும் ஆபத்தானது எனத் தெரிவித்து, அப்பகுதி மக்கள் ரயிலை மறித்து, பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர். இப் பகுதியானது நான்கு சந்திகளைக் கொண்டமைந்துள்ள நிலையில், கடவை பாதுகாப்பற்ற நிலையில், சமிக்ஞை விளக்குகள் மாத்திரமே பொருத்தப்பட்டுள்ளன. இந்தச் சமிக்ஞைகள், சில வேளைகளில் ஒலியெழுப்பாது காணப்படுவதுடன், சில நேரங்களில் தொடர்ச்சியாக ஒலியெழுப்பி வருவதால், சாரதிகள் மத்தியில் பெரும் குழப்பத்தை எற்படுத்தும் பிரதேசமாகக் காணப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில், தாண்டிக்குளம் மாத்திரமின்றி பாலமாட்டை, புதூர், செட்டிகுளம், திருநாவல்குளம், பெரியகட்டு, மன்னகுளம் போன்ற பகுதிகளிலும் அதிகளவான பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன. எனினும் இதற்கான தீர்வை இதுவரை ரயில்வே திணைக்களம் பெற்றுக்கொடுக்காத நிலையே காணப்படுகின்றது.

வடக்கில் ஏற்பட்டு வரும் ரயில் விபத்துக்களாயினும் சரி, வீதி விபத்துகளாயினும் சரி சாரதிகளின் அவசரமும் பயணத்தின்போதான அசமந்தமுமே காரணமாக அமைக்கின்றதே தவிர, வேறு காரணங்களைச் சொல்லிக்கொள்ள முடியாது என்பதே யதார்த்தம்.

எனவே, வடக்கில் அபிவிருத்தி என்பது, உயிர்பலி எடுக்கும் திட்டங்களாக இல்லாமல், மக்களின் வாழ்வியலுக்கும் வாழ்வாதாரத்துக்கும் வலுச் சேர்க்கும் காரணிகளாக அமையவேண்டும் என்பதே அனைவரது விருப்பமாக உள்ளது. அத்துடன், மக்களின் அவதானம் மிக்க பயணங்களும் விபத்துகளில் இருந்து தவிர்க்கும் என்பதே உண்மை.

எனவே, விபத்துகளைத் தவிர்ப்பதற்கு அணைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ள போதிலும் விபத்துகளைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு திணைக்கள அதிகாரிகளும் தாம் சார்ந்த திணைக்களங்களின் ஊடாகச் செயற்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பார்களாயின் விபத்துகளைத் தவிர்க்கலாம் என்பது மறுக்க முடியாத உண்மை.

# நுகர்வோரைப் பாதுகாக்க அதிரடியான நடவடிக்கையே அவசியம்

பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கலாம்; இல்லையேல், நாடு முழுமையாக முடக்கப்பட்டிருக்கலாம் என்ற நினைப்பு, ஒவ்வொருவரிடத்திலும் எழத்தொடங்கியுள்ளது. முடங்கியிருந்த காலத்தில் வருமானம் இல்லாவிடினும் செலவைக் கட்டுப்படுத்த முடிந்தது. என்பதே, அவ்வாறானவர்களின் கருத்தாக அமைந்திருந்தது.

விலைவாசி அதிகரிப்பு, தலையைத் தூக்கமுடியாத அளவுக்கு எகிறி நிற்கிறது. சமையலறைக்குள் செல்வதற்கே பலரும் அஞ்சுகின்றனர். மரக்கறிகளின் விலையைக் கேட்டாலே, தலை சுற்றுகிறது. இதற்கிடையில் சமையல் எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. நாடளாவிய ரீதியில், அங்கொன்றும் இங்கொன்றுமாக வெடிக்கின்றன.

எரிவாயு அடுப்பு வெடித்தமையால் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார். அச்சம்பவத்தை அடுத்து, பெண்ணின் கணவன் 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், சமையலறையில் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லையெனத் தெரிவித்து, உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு, கொழும்பில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (17) முன்னெடுத்திருந்தது.

இந்நிலையில், இவ்வாறு சமையல் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அதுவும் எதிர்வரும் வாரத்தில் தாக்கல் செய்யவிருப்பதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது. இங்கு சமையல் எரிவாயுவை பயன்படுத்துவோர் பற்றி ஒரு துளியளவேனும் அந்த அதிகார சபை சிந்திக்கவில்லை என்பது புலனாகிறது.

விநியோகிக்கப்பட்டிருக்கும் எரிவாயு சிலிண்டர்களை, உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையில், அதிரடியான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவேண்டும். இல்லையேல், இன்னும் எத்தனை உயிரிழப்புகளை சந்திக்கவேண்டிவரும் எனக் கூறமுடியாது.

எரிவாயு அடுப்பை ஓரங்கட்டிவிட்டு, மண்ணெண்ணை மற்றும் விறகு அடுப்புகளுக்கு பலரும் மாறிவிட்டனர். நகர்ப்புறங்களிலும் அடுக்கு மாடிகளிலும் இவ்விரு மாற்று ஏற்பாடுகளுக்கு சாத்தியமே இல்லை. எனினும், எரிவாயுவின் விலை அதிகரித்த மறுநிமிடமே, மண்ணெண்ணை அடுப்புகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுவிட்டன.

வெடித்துச் சிதறும் ஒவ்வோர் அடுப்பையும் பயன்படுத்தியோருக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்கும் வகையில் நடவடிக்கையை எடுக்கவேண்டும். அத்துடன், விநியோகிக்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர்களை மீளப்பெறுவதைத் துரிதப்படுத்த வேண்டும். பாதிக்கப்படும் நுகர்வோரின் கோரிக்கைக்கு முகவர்கள் அல்லது கடைக்காரர்கள் செவிமடுக்கவேண்டும்.

எனினும், ஒவ்வொரு தரப்பினரும் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றனர். இதனால், ஒவ்வொரு பிரஜையும் பாதிப்பை எதிர்நோக்குகின்றார். மூவேளை உணவுக்காக ஹோட்டல்களை நம்பியிருப்போருக்கு ஒருவேளை உணவுக்கூட உண்ணமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இன்னும் சில ஹோட்டல்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன.

ஒருபுறம் விலையேற்றம்; மறுபுறம், எரிவாயு அடுப்புகள் வெடித்தல்; இன்னொருபுறம், எரிவாயு பற்றாக்குறை; இப்படியே சுமக்கமுடியாத அளவுக்கு மக்களின் தலைகளில் விலைசுமை ஏற்றப்படுகின்றது. ஆகையால், நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான அதிரடியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தங்களின் ஆவேசமான கோபத்துக்கு எல்லோரும் பயப்பட வேண்டும் என எண்ணும் பேர்வழிகள் பலவீனமானவர்காகவே இருப்பார்கள்.

எல்லோருக்கும் கோபம் வரலாம்; ஆனால், அவை சீக்கிரம் அணைந்துவிட வேண்டும். கண் முன்னால் தவறுகள் இடம்பெறுவதைக் கண்டால், எவரும் சினம் கொள்வது இயல்பு.

கோபம் கொள்வது தவறும் இல்லை. அடாது செய்பவர்களை சினம் மூலம் அடக்க முடியும். இதற்குத் துணிச்சலும் நியாயமும் அமைந்தால்த்தான் சரியெனக் கொள்ள முடியும். வீம்புக்காகத் தங்களைச் சண்டியன் என நிரூபிக்க முனைந்தால் கேவலப்படுவார்கள்.

தார்மிக கோபம் கட்டாயம் தேவையானது. துஷ்டர்களை அடக்க, தீயெனக் கிளம்பும் ஆக்ரோஷம் ரௌத்திரமாகின்றது.

கட்டுப்படுத்த வேண்டிய ஆத்திரத்தை, கட்டுப்படுத்தியே ஆகவேண்டும். நியாயமற்ற முறையில் பழைய பகையை வைத்துக் கொண்டால், அதுவே மிகையாகி, அடிதடி, சண்டை, காயங்கள் எனப் பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தி விடும். பிரச்சினைகளைத் தீர்க்க, அமைதியுடன் சிந்திக்கவும். அடக்கம் நல்லது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

லக்ஸ்மன்

# பிரச்சினைக்கு என்ன தீர்வு?

நமது நாட்டைப் பொறுத்தவரையில், 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' நிலைமையில்தான் மாற்றம் ஏற்பட வேண்டும். தற்போது நடைபெற்று வருபவைகளெல்லாம் நாட்டை மீண்டும் பல தசாப்தங்களுக்கு பின்னே கொண்டு சென்றுவிடும் என்றுதான் எல்லோரும் எச்சரிக்கிறார்கள்; அச்சப்படுகிறார்கள். தொடர்ந்தும் அரசாங்கம் பற்றி வெளிவரும் விமர்சனங்களின் போது, இருப்பவர்களுக்குப் பிரச்சினையில்லை; இல்லாதவர்களுக்குத்தான் பிரச்சினை என்ற நிலைப்பாடொன்றே ஏற்பட்டுவிட்டது. இதன் மேம்படும் நிலைமை, நாட்டை நீண்ட காலத்துக்கு வறுமைக்குள்தான் வைத்திருக்கும்.

ஆனால், நாட்டின் குழப்பங்களுக்கு அமைச்சரவையில் மாற்றத்தினை ஏற்படுத்தினால் சரியாகிவிடும் என்றுதான் ஜனாதிபதி நினைக்கிறார். நாடு பஞ்சத்தின் உச்சத்திற்கு வந்துவிட்டபோதும் கூட, இந்த மாற்றத்தினை மட்டும் நம்பி அரசை நகர்த்தலாம் என்று நம்புவது மிகப்பெரும் கெட்டித்தனமே.

கடந்த வாரத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டம் பெரும்பான்மையுடன் நிறைவேறிவிட்டது. அது நிறைவேறி விட்டதால் மாத்திரம் நாட்டின் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிடுமா என்றால் இல்லை என்பதே பதில். கடந்த பல மாதங்களாக நாட்டில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவியது. அந்தத் தட்டுப்பாடு தட்டுப்பாடாகவே வைக்கப்பட்டு விலையும் அதிகரிக்கப்பட்டது. சில நாள்களில் பால்மா சந்தைக்கு வந்தது. ஆனால், மீண்டும் எதுவுமில்லாத நிலைமை தோன்றிவிட்டது. இந்த நிலைமை ஒரு பொருளுக்கு மாத்திரமல்ல, பல பொருட்களுக்கும் இருக்கிறது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில், பாதுகாப்புத் துறைகளுக்கு ஐந்தில் ஒரு பங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள முடியாத அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் வீழ்ச்சியடைந்த உற்பத்தித்துறை, திட்டமிடாத முறையில் எழுந்தமானமாக ஒரே மூச்சில் மேற்கொள்ளப்பட்ட சேதன உரக் கொள்கையால் பெருந்தோட்ட விவசாயம், நெல் உற்பத்தி, உப உணவு உற்பத்தி என்பன வீழ்ச்சியடைந்துள்ளபோது இந்தளவுக்கான பாதுகாப்புச் செலவு எதற்கு என்ற கேள்வி மிகப்பெரிதாக இருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ என எத்தனையோ ராஜபக்ஷர்களின் கோபுரமாகக் கட்டப்பட்டிருக்கின்ற இன்றைய அரசாங்கம் கொண்டு நடத்துகின்ற இச் செயற்பாடானது நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிடும் என்று தெரிந்திருந்தும், கைகளை உயர்த்துகின்ற ஆட்சிக்கு ஆதரவானவர்கள் இருக்கும் வரையில், நாட்டின் அரசியலுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை.

இந்த வரவு செலவுத்திட்டம், வெறும் எழுத்துகளாலும் இலக்கங்களாலும் நிரப்பட்டிருக்கின்றதே தவிர, நாட்டு மக்களுக்குப் பிரயோசனமாக ஒன்றுமில்லை என்பதே, நடுநிலை அரசியல் தரப்பினருடைய விமர்சனமாக இருக்கிறது. நிச்சயமாக, நாட்டின் விவசாயத்துறை வீழ்ச்சியடைந்து விட்டது. இதனை மறைப்பதற்கு, எல்லோரும் முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். பல அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்று ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதியும் அரசாங்கமும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக்கொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் எதிர்க்கட்சியும் அரசாங்கத்தின் நகர்வுகளுக்கு சில ஆலோசனைகளை முன்வைக்கிறார்கள். ஆனால், அவற்றையெல்லாம் கேட்க வேண்டிய நிலையில் நாங்கள் இல்லை என்பதே, அரசின் நிலைப்பாடாக இருக்கிறது. இவ்வாறான இறுமாப்பான போக்கு, நாட்டை மரவள்ளிக்கிழங்கு உண்ணும் நிலைக்குக் கொண்டுசென்றுவிடலாமோ என்ற அச்சம் உருவாகத் தொடங்கியிருக்கிறது. இதனாலேயோ என்னமோ அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சி பீடத்தில் அமர்த்திய மக்களாலேயே வெறுக்கப்படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

பால்மா, சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றத்துக்கு அப்பால் எப்போது எங்கு வெடிக்கும் என்று தெரியாத நிலை இருக்கிறது. அதற்குத் தீர்வு காண்பதற்கு யாரிடமும் சரியான தீர்வில்லை. எல்லாரும் எரிவாயு சிலின்டர்களைத் தள்ளி வைத்துவிட்டு, விறகு அடுப்புக்கும் மண்ணெண்ணை அடுப்புக்கும் மாறி வருகிறார்கள். இது ஒரு வகையில் நல்லதுதான்; என்றாலும் சிரமமானது.

ஒன்று மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தவேண்டும் அல்லது விறகு, மண்ணெண்ணை அடுப்புகளுக்கு மாறவேண்டும் என்ற நிலைமையானது மக்களுக்குச் சிரமங்களையே அதிகரிக்கின்றது. இவ்வாறான நிலைமைகள் மக்களை மேலும் பாதிப்படைய வைத்து வறுமை நிலைக்குள் தள்ளிவிட்டுவிடும்.

உற்பத்தியுமில்லை, உழைப்போ, வருமானமோ இல்லையென்றால் வாழ்க்கைக்கென்ன முடிவு என்பதே நிரந்தரமாகிவிடும். என்றாலும் விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டா நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலையென்பது, ஒட்டுமொத்தமாக இந்த நாட்டு மக்களால் வெறுக்கத்தக்கதோர் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அரசியலும், அரசியலைத் தொடர்வதற்காக முன்வைக்கின்ற வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படுவதில்லை. அவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும் நிலைப்பாடல்ல. ஆனால், நான் சொன்னவை, சொல்பவை எல்லாவற்றையும் நிறைவேற்றியே தீருவேன் என்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தால் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகத்தாகத்தான் மாறும்.

நாட்டு மக்களின் நலனை அக்கறையுடன் கவனித்துக் கொள்ள வேண்டியது அரசாங்கமே என்பதனை யாரும் மறந்து விடக்கூடாது. இதில் ஏற்படும் தளம்பல்களே பல பிரச்சினைகளுக்கு காரணமாகின்றன. ஆனால் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளாமலில்லை. அதில் முக்கியமானதொன்றுதான் பசில் ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினராக்கி, நிதியமைச்சராக்கியது. ஆனால், அதன் பிறகு நிலைமை இன்னும் மோசமாக மாறியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அவர், அலாவுதீனின் அற்புத விளக்கோடு பொருளாதார அற்புதங்களையும் நிகழ்த்துவார் என்ற பெரும் எதிர்பார்க்களுடன் பாராளுமன்றம் வந்து நிதியமைச்சராகி இன்று இந்த வரவு செலவுத்திட்டத்தினை வெற்றுப் பானையாக வெறும் எழுத்துகளுடனும் இலக்கங்களுடனும் சமர்ப்பித்துள்ளார் என்ற விமர்சனத்துக்கே உள்ளானார்.

எதிர்க்கட்சியினர் மாத்திரமல்ல, பொருளாதார நிபுணர்கள் வர்த்தகர்கள், பொது மக்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் என அனைத்துத் தரப்பினராலுமே விமர்சிக்கப்படும் ஒரு வரவு செலவுத்திட்டத்தினையே அவரால் முன்வைக்க முடிந்திருக்கிறது. அதே போன்றுதான் மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டது. ஆனாலும் ஒன்றும் பலனில்லை என்பதே உண்மை.

இந்த ஆட்சி குறித்து அரச அமைச்சர்கள், அரசின் பங்காளிக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என எல்லோரும் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாத நிலையிலேயே உள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு டொலர் தட்டுப்பாடு நீக்கப்பட வேண்டும். அதற்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றை நாடவேண்டும். அதற்கு நாங்கள் தயாரில்லை என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருந்து வருவதற்கு வேறும் சில அரசியல் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தாலும், வேறு வழியில்லாத தீர்வானால் என்ன செய்யலாம் என்றே அரசாங்கம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இந்த இடத்தில்தான், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்தல், வெளிநாட்டு நெருக்கடிகளிலிருந்து வெளியே வருதல், பொருளாதாரப் பிரச்சினைகள், கடன் சுமைகளைக் குறைத்தல், அபிவிருத்தி, எதிர்காலத்தில் ஏற்படவுள்ள வறுமையை இல்லாமல் செய்தல் என பல அடுக்கப்படும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வைக் காணவேண்டியிருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் தீர்வாக, ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளுதல்; பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிகொண்டோம் என்றுபெருமை பேசிக் கொள்ளுதல் என்ற நிலைப்பாடுகளிலிருந்து இருந்து வெளியில் வருவதேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஏனைய பல அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளும் முன்வைக்கின்ற கருத்துகளையும் ஆலோசனைகளையும் அனுசரித்து, விழுந்து கொண்டிருக்கும் நாட்டைத் தூக்கி நிறுத்த முடியாவிட்டாலும் நிமிர்வதற்கான ஊக்கத்தையாவது கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இதனை எந்தவோர் அரசியலுடனும் பார்க்க முயல்வது மேலும் ஆபத்தையே கொண்டுவரும் என்பது மாத்திரமே மறுக்கமுடியாத உண்மை.

எப்போதும் அரசியலும் இனவாதமும் ஆட்சிகளுக்கு தீர்வாக இருப்பதில்லை என்பதற்கு இப்போதைய நமது நாட்டின் ஆட்சி சிறந்த எடுத்துக்காட்டு!

## கடிதங்கள்

### ஐந்து வருடங்களாகத் தொடரும் அவலம்

## வீதியை புனரமைக்கவும்

மாத்தளை மாவட்டத்தில் எல்கடுவ, செப்புவத்தை தோட்டத்தின் பிரதான வீதியின் புனர்நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது குறித்து அந்த வீதியைப் பயன்படுத்துவோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம், இன்று வரையில் பூர்த்தி செய்யப்படாமல் விடப்பட்டுள்ளதால் பிரதேச மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். பாதை புனரமைப்பு என்ற பெயரில், வீதியில் மண் நிரப்பப்படுகின்றது. மழை பெய்யும் பொது, மண், மழைநீரால் அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றது. வீதி மீண்டும் குன்றும் குழியுமாகி விடுகின்றது.

இந்த வீதி குறித்த பிரதேச மக்களுக்கு முக்கியமான வீதியாகும். குறிப்பாக, வைத்தியசாலை, தபால்நிலையம், பாடசாலை, சந்தை என இந்த வீதியால் சென்றே தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அத்துடன் இந்த வீதி திருத்தப்படாமல் காணப்படுவதால், காலை, மாலை வேளைகளில் வாகன நெருக்கடியும் அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறான அசௌகரியங்கள் தொடர்வதால், இந்த வீதியில் பஸ் சேவைகள் தவிர்க்கப்படுகின்றன. ஒரேயொரு பஸ் சேவை மட்டுமே இடம்பெறுகின்றது. எனவே குறித்த வீதியை, தாமதம் செய்யாமல், உடனடியாக திருத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு தகுதி வாய்ந்த அதிகாரிகளிடம் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றார்கள்.

–ந. சிவசாமி




# அம்பாள்புரத்தில் அநியாயம்



சுப்பிரமணியம் பாஸ்கரன்



“எங்கள் கிராமத்தில் கூடுதலான பிள்ளைகள் இடையில் பாடசாலையை விட்டு விடுகின்றனர். இதற்கு யார் காரணம்? வீதி சீராக இருந்தால், போக்குவரத்து வசதிகள் இருந்தால், எங்கள் பிள்ளைகளும் உற்சாகத்தோடு மேற்கொண்டு படிக்க முடியும்” என்று அம்பாள்புரம் வாசிகள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-09 வீதியில் மாங்குளம் சந்தியிருந்து மன்னார் - வெள்ளாங்குளம் பிரதான வீதியின், வன்னிவிளாங்குளம் சந்தியிலிருந்து வவுனிக்குளம் வரை செல்லும் வீதியில் தான், அம்பாள்புரம் என்ற கிராமம் அமைந்துள்ளது.

அம்பாள்புரம் கிராமத்தில், தற்போது 460இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஆனால்; சீரான வீதியில்லை; போக்குவரத்துக்கு வாகனங்கள் இல்லை; வசதி படைத்தவர்களும் இல்லை; அன்றாடம் கூலித் தொழில் செய்து வாழ்பவர்களே அதிகம் என்பதை, இக்கிராமத்து மக்களின் வாழ்வும் வாழ்விடங்களும் காட்டுகின்றன.

“எங்களது வாழ்க்கை போய்விட்டது. எங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலம் மோசமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. அதையாவது காப்பாற்றுங்கள். 1977 ஆம் ஆண்டு இங்கே வந்து குடியேறினோம். அன்றிலிருந்து இன்றுவரை கண்ணீரோடும் கவலையோடும் தான் வாழுகின்றோம். காரணம், இந்தக் கிராமம் அன்றிலிருந்து இன்று வரை இப்படியேதான் இருக்கிறது.

“தேர்தல் ஏதும் வந்தால், இங்கு வாக்குக் கேட்டு வருகின்ற எல்லோரும், அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என நிறையவே சொல்வார்கள். ஆனால், தேர்தலுக்கு பின்னர் அவர்களைக் காண முடியாது.

“இந்தக் கிராமத்துக்கு பஸ் இல்லை; ஒழுங்கான வீதி இல்லை; எங்களது பிள்ளைகள் இரண்டாம், மூன்றாம் தலைமுறைகளாக மாங்குளம், வன்னிவிளாங்குளம் பாடசாலைகளிலேயே அதிகளவில் கற்று வருகின்றனர். ஆனால், போக்குவரத்து வசதிகள் இல்லை. தினமும் பாடசாலைக்குச் சென்று, களைத்து விழுந்து வருகின்றார்கள். நன்றாகப் படிக்கக்கூடிய திறமைசாலியான பிள்ளைகள் உள்ளனர். பிரச்சினை என்னவென்றால் பஸ் இல்லை. தினமும் பாடசாலைக்குச் செல்லும் போது, நடந்தும் சைக்கிளிலுமே போய் வருவதால் சோர்வடைகின்றனர். மேலதிக வகுப்புகளுக்குப் போவதற்கு வாகன வசதிகளில்லை. எல்லோரிடமும் சைக்கிள் இல்லை; வாகனம் இல்லை. அவசரத்துக்கு ஓட்டோ பிடித்தால், ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டும். அதற்கு வருமானமில்லை. இதனால், கூடுதலான பிள்ளைகள் இடையில் பாடசாலையை விட்டு விடுகின்றனர். இதற்கு யார் காரணம்? வீதி சீராக இருந்தால், போக்குவரத்து வசதிகள் இருந்தால் எங்கள் பிள்ளைகளும் உற்சாகத்தோடு மேற்கொண்டு படிக்க முடியும் என்று இந்தக் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

“எந்தத் தொழில் வாய்ப்புகளும் இல்லை. சில குடும்பங்கள் வவுனிக்குளத்தின் நன்னீர் மீன்பிடியை நம்பியும் கணிசமான இளைஞர்கள், யுவதிகள் கிளிநொச்சி, வவுனியாவில் இருக்கின்ற ஆடை தொழிற்சாலைகளை நம்பியும், இதைவிடப் பலர் வேலை தேடி வெளி இடங்களுக்கும் செல்கிறனர். இவற்றைத் தவிர ஏனைய குடும்பங்களின் நிலை, மிக வறுமை நிலைமையில் தான் உள்ளன”.

போருக்குப் பின்னரான வாழ்வில் வாழ்வாதாரமின்றி, அடிப்படை வசதிகள் இன்றி, அன்றாடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் அம்பாள்புரம் மக்கள், தமக்கான வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரியுள்ளனர். தாங்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து வீதிகளை புனரமைத்து தருமாறே இந்த மக்கள் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுகின்ற மாந்தை கிழக்கு பிரதேசமானது, சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாமலும் பயணிப்பதற்கு ஒழுங்கான வீதிகள் இல்லாமலும் இன்று வரை காணப்படுகின்றது.

இந்த நெருக்கடிகளுக்கும் சவல்களுக்கும் அன்றாடம் முகம் கொடுத்து, எத்தனையோ ஆசிரியர்களும் அரச அதிகாரிகளும் தமது சேவைகளை, கடமை, பொறுப்பு போன்ற உணர்வுகளையும் தாண்டி, தமது பணிகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்து வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1977ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்து இடம்பெயர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு, குறித்த பிரதேசத்தில் காணிகள் வழங்கப்பட்டு, குடியேற்றப்பட்டனர். அனைத்தையும் இழந்து, அகதிகள் என்ற அடையாளத்தோடு குடியேறிய மக்களின் அயராத உழைப்பும் விடாமுயற்சியும் அவர்களது வாழ்வானது.

“போர் நடைபெற்ற காலங்களில் கூட, பொருளாதாரம் இருந்தது; வாழ்வாதாரம் இருந்தது; வளமாக வாழந்தோம்; போக்குவரத்து வசதிகள் இருந்தன. ஆனால், இன்று நாங்கள், பொருளாதார பலமில்லாதவர்களாக வாழ்வாதாரங்கள் இன்றி, அடிப்படை வசதிகள் இன்றியும் போக்குவரத்து வசதிகள் இன்றியும் அதைவிட காட்டு யானைகளின் தொல்லை, வறுமை என்று எமது அவலம் தொடர்கின்றது” என இங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

“போக்குவரத்து வசதி என்பது அறவே இல்லை. இதனால், இங்குள்ள மக்கள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், கர்ப்பவதிகள் தினமும் கிட்டத்தட்ட ஏழு கிலோ மீற்றர் தூரம் கால்நடையாக வன்னிவிளாங்குளம் சந்திக்கு சென்று அங்கிருந்து பஸ்களில் மல்லாவி, மாங்குளத்துக்குச் சென்று தமது தேவைகளை நிறைவு செய்து விட்டு, மீளவும் வன்னிவிளாங்குளம் சந்திக்கு வந்து, அதிலிருந்து மீளவும் ஏழு கிலோ மீற்றர் தூரம் கால்நடையாக வீடுகளுக்குச் செல்லவேண்டும். அந்த நேரத்துக்கு மல்லாவி அல்லது மாங்குளத்துக்கு பஸ்கள் இல்லாவிட்டல், அதற்கும் நடந்து தான் செல்லவேண்டும். இவ்வாறே கடந்த 11 வருடங்களாக பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் தமது தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர்.

“இதுமட்டுமல்ல, அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய குடிநீர் கூட இல்லாத நிலையில், அதிகளவான மக்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வசதிகள் இல்லாதநிலையில், கிராமத்தில் இருந்து ஏழு கிலோ மீற்றர் தூரம் சென்று, பணத்துக்கே தண்ணீரை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு, வறுமை, குடிநீர் வசதியின்மை, வறட்சி, தொழில் வாய்ப்பின்மை, போக்குவரத்து வசதிகள் இன்மை, காட்டு யானைகளின் தொல்லை என்று ஏகப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்ந்து வரும் அம்பாள்புரம் கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு, இந்த மக்கள் அதிகாரிகள், அரசியல்வாதிகள் எனப் பல்வேறு தரப்பினரிடமும் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்,



---

மாற்றுத்திறனாளிகளும்

# வாழ வழி செய்வோம்...



அ . அச்சுதன்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாற்றுத்திறனாளிகள் மிகவும் அதிகமாக வாழ்கின்றனர். அவர்களது வாழ்க்கை, பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு, தொடர்ச்சியாக கஷ்டங்களுடன் தொடர்கின்றது.

2009 ஆம் ஆண்டு, யுத்தம் நிறைவடைந்தது; ஆனால், யுத்தத்தின் சாட்சிகளாக இன்றுவரை வடக்கு, கிழக்கில் மாற்றுத்திறனாளிகள் காணப்படுகின்றனர். இவர்களது உறவினர்கள், குடும்பங்களையும் நினைத்துப் பார்க்க வேண்டும், இவர்களை ஆற்றுப்படுத்துவது யார்? இவர்களது விடயத்தில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? வேலைவாய்ப்பில் கூட, இவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

2014ஆம் ஆண்டு, அரசாங்கம் தயாரித்த மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய செயற்றிட்டத்தை அமல்படுத்துமாறு வலியுறுத்தி, மாற்றுத்திறனாளிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இம்முறை, மாற்றுத்திறனாளிகள் தினமன்று, திருகோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும் திருகோணமலை, குச்சவெளி, வெருகல், கந்தளாய் ஆகிய பகுதிகளில் போராட்டம் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்போம்; மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவோம்; மூன்று சதவீத அரச தொழில் வாய்ப்பை உறுதிசெய்வோம்; அரசே மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட அடையாள அட்டையை வழங்கு; பொதுக்கட்டடங்களுக்குள் அணுகும் வசதிகளை ஏற்படுத்துங்கள்; சைகை மொழி தெரிந்த அலுவலர்களை சேவைக்கு அமர்த்துங்கள்; மாற்றுத்திறனாளிகளுக்கான சுகாதார சேவைகளை உறுதிப்படுத்துங்கள்; மாற்றுத்திறனுடைய மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்போம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

மாற்றுத்திறனாளிகள் அதிகமுள்ள மாவட்டமாக, மட்டக்களப்பு மாவட்டம் உள்ளதாக கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் என். மதிவண்ணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தானாமுனை ‘மியானி’ மண்டபத்தில், கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகள் தினம் இம்முறை நடைபெற்றது. இதன் போது பணிப்பாளர் மதிவண்ணன் உரையாற்றினார்.

“மட்டக்களப்பு மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் கடந்து வந்த பாதைகளை நாங்கள் திரும்பிப்பார்ப்பதுண்டு. மாற்றுத்திறனாளிகள் அதிகமுள்ள மாவட்டமாகவும் அதேபோன்று மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகளவான சேவையினை வழங்கும் மாவட்டமாகவும் மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது.

“கடந்த காலத்தில்,தொழில் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்காக மாற்றுத்திறனாளிகளுக்காக மாற்று ஒழுங்குகளும் பரீட்சைகளும் இடம் பெற்றன. அதில் மட்டக்களப்பு மாவட்டம் வெற்றியும் கண்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நாட்டுக்கு பாரமானவர்களாக பார்க்கப்பட்டார்கள். ஆனால், அவர்களை நாங்கள் மற்றவர்களுடன் ஒன்றிணைத்திருக்கின்றோம். நாட்டுக்கு முன்னுதாரணமாகவும் பொருளாதார ரீதியில் பங்களிப்பு செய்பவர்களாகவும் மாற்றுத்திறனாளிகள் இருக்கின்றனர்.

மாறிவரும் உலகுக்கு ஏற்றவாறு மாற்றுத்திறனாளிகளை இணைத்து, வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அரசார்பற்ற நிறுவனங்கள் இத்திட்டங்களில் கரிசனை காட்ட வேண்டும்” என்றார் மதிவண்ணன்.

இதேவேளை, அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகள் உள்வாங்கப்படாததை இட்டு, ‘வெருகல் கதிரவன்’ மாற்றுத் திறனாளிகள் அமைப்பு, திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பன்டிக்கொரலாவுக்கு பிரதேச செயலாளர் ஊடாக மகஜர் ஒன்றை அண்மையில் கையளித்தது. இம் மகஜரை, கதிரவன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் ஜெ.கோவிந்தினி, செயலாளர் சி.குபேந்திரன் ஆகியோர் கையளித்தனர்.

அம் மகஜர் பின்வருமாறு அமைந்திருந்தது.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டமானதும் அதற்கான தாங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள இலக்குக் குழுவும் மிகவும் சிறந்தது என நாம் கருதுகின்றோம். அதற்காக இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் இன்றைய ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஜனாதிபதி அவர்களுக்கும் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியான தங்களுக்கும் முதற் கண் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மாற்றுத்திறனாளின் உரிமையான (1998 பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 27/88 ஒகஸ்ட் 18 - 1988 பொதுத்துறையில் வெற்றிடங்களை நிரப்பும் போது மாற்றுத்திறனாளிகளுக்கு 3 வீத வேலை வாய்ப்பு வழங்குதல்) அடிப்படையில் வெருகல் பிரதேசத்தில் வழங்கப்பட்ட இரண்டாம் கட்ட வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகள் எவரும் உள்வாங்கப்படவில்லை. மேலும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் 13 பேர் விண்ணப்பித்து நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய போதிலும் அதில் ஒருவர் கூட தொழில் வாய்ப்புக்காக தெரிவு செய்யப்படாததையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் அதிகமான மாற்றுத் திறனாளிகள் வாழ்ந்து வருவதோடு அவர்களில் 90 சத வீதமானவர்கள் நிரந்தர வருமானம் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே, இவ்வேலை வாய்ப்புத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளை உள்வாங்கி எமது உரிமையான 3 வீத தொழில் வாய்ப்பினை வழங்கி, தமது தொழில் உரிமையை உறுதி செய்யுமாறு கோருகின்றனர். இம் மகஜரின் பிரதிகளை கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கபில அதுகோரல, ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டு புள்ளிவிவரவியல் கணக்கெடுப்புக்கு ஏற்ப எமது நாட்டின் சனத்தொகையில் 8.7 வீதமானோர் மாற்றுத்திறனாளிகளாவர். அவ்வாறானவர்கள் 1617,924 பேர் உள்ளனர். இவர்களுள் 55 வீதமானோர் உழைக்கும் சமூகத்தினராவர். அதாவது 19 முதல் 55 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். அதே போன்று எதிர்வரும் காலத்தில் எமது நாட்டில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் உழைக்கும் சமூகம் குறைவடையும். அதேபோன்று தொற்றா நோய்கள் அதிகரிக்கும். அதாவது மென்மேலும் மாற்றுத்திறனுடையவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இவ்வாறான அனைத்து காரணங்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது, எமது நாடென்ற வகையில் பாரிய சவால்கள் உள்ளன. எனவே அச்சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு மாற்றுத்திறனாளிகளை மேம்படுத்துவது அனைவரினதும் பொறுப்பாகும்.









# அங்கிருத்தலின் அவசியம்

அங்கிருத்தலின் அவசியம் இணையத்தளம் : கொழும்பில் நடைபெறும் கண்காட்சியானது முன்னோட்டங்கள், மேலதிக உள்ளடக்கம் மற்றும் நிகழ்ச்சிகளுடன் கூடிய இணையதளத்துடன் டிசெம்பர் 15, 2021 அன்று ஆரம்பமானது.

கண்காட்சியானது 2022 பெப்ரவரி 1 முதல் – 2022 ஏப்ரல் 3 ஆம் திகதி வரையிலும், கொழும்பு-02, பார்க் ஸ்ட்ரீட் மியூஸ், கொழும்பு த ஸ்டேபிள்ஸ், 48, பார்க் ஸ்ட்ரீட் மு.ப. 11 - பி.ப. 7 வரையிலும் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் விசேட சுற்றுப்பயணங்கள், உரைகள் மற்றும், பிற நிகழ்வுகளுக்கு எங்கள் இணையத்தளத்தைப் பார்க்கவும். அனைவருக்குமான ஒரு இலவசக்கண்காட்சி. இது ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் வழங்கப்படும்;

ஜெஃப்ரி பாவா: அங்கிருத்தலின் அவசியம் பாவாவின்; கட்டிடக்கலை தொழில்முறைகளை பார்வையிடுவதற்காக காப்பகங்களில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களின் முதலாவது பாரிய கண்காட்சி இதுவாகும். யோசனைகள், வரைபடங்கள், கட்டிடங்கள் மற்றும் இடங்களுக்கு இடையிலான உறவுகளை ஆராய்ந்து நான்கு கருப்பொருள் பிரிவுகளாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி, பாவாவின் தொழில்முறை வழக்கங்களில் படங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வழிமுறைகளை ஆராய்கிறது.

பாவா ஆவணக் காப்பகத்தில் இருந்து 120 க்கும் மேற்பட்ட ஆவணங்கள் பார்வைக்கு வைக்கப்படும். அவற்றில் பெரும்பாலானவை இதற்கு முன்னர் பொது வெளியில் காண்பிக்கப்படாதவை, இதில் கட்டப்படாத பணிகள் மற்றும் பாவாவின் பயணங்களில் எடுக்கப்பட்ட அவரது சொந்த புகைப்படங்கள் ஆகியவை அடங்கும்.

ஒரு கட்டிடக் கலைஞராக ஜெஃப்ரி பாவாவின் தனித்துவமான தொழில்முறைஇ கைவிடப்பட்ட இறப்பர் மற்றும் கறுவாத் தோட்டத்தை கொள்வனவு செய்வதில் ஆரம்பமாகியதுஇ அதை அவர் 1948 இல் - பிரித்தானியப் பேரரசில் இருந்து நாடு புதிதாக சுதந்திரம் பெற்றதை அடுத்துஇ லுனுகங்க என்று அழைக்கப்படும் தோட்டமாக மாற்றினார். இந்த முதல் திட்டத்திலிருந்தே, பாவாவின் படைப்பு, இடத்தின் கருத்தமைவைப் புரிந்து கொள்ள முயலும் கட்டிடக்கலையால் குறிக்கப்படுகிறது. இடத்தினை உருவாக்கும் அம்சங்களுடன் மிகவும் இணக்கமான ஒரு கட்டிடக்கலை தொழில்முறையில், வரைபடங்கள் ஒரு சிக்கலான பாத்திரத்தை வகிக்கின்றன.

இவ்வாக்கங்கள்; ஒவ்வொரு திட்டத்தின் அமைவிடம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தனித்தன்மையைக் காட்டுகின்றன. அவை கலாச்சாரம், வரலாறு மற்றும் சுற்றுச்சூழலின் பல அடுக்குகளில் தளத்தை ஆராய்வதற்கான தொழில்முறையின் மூலம்இ ஒரு வரைபடத்தில் அதன் புவியியல் நிலையையும் தாண்டிய ஒரு வரையறையை வகுக்கிறது.


ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, பிரேசில், சிங்கப்பூர் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள பல இடங்களில் பாவாவின் படைப்புகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தாலும், இலங்கையில் இதுவே முதலாகும்;. இக் கண்காட்சியானது ஜெஃப்ரி பாவா அறக்கட்டளையின் காப்பாளர் ஷயரி டி சில்வாவால் நிர்வகிக்கப்படுவதுடன், செபஸ்டியன் போசிங்கிஸ், டொமினிக் சன்சோனி மற்றும் கிளாரா கிராஃப்ட் ஐசோனோ ஆகியோரின் புதிய புகைப்படங்கள் மற்றும் வீடியோ படைப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.


ஜெஃப்ரி பாவா அறக்கட்டளை என்பது ஒரு இலாப நோக்கற்ற பொது அறக்கட்டளை ஆகும். இது கட்டிடக்கலை, நுண்கலைகள் மற்றும் சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் கற்கைகள் ஆகிய துறைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கங்களைக் கொண்டு மறைந்த கட்டிடக் கலைஞரால் 1982 இல் நிறுவப்பட்டது.

இந்தக் கண்காட்சிக்கு கொஹ்லர் இந்தியா மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிஇ கொழும்பு ஆகியவற்றிலிருந்து நிதியுதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.


எட்வர்ட்ஸ் ரீட் மற்றும் பெக். புகைப்படம், பரி தோமாவின் ஆரம்ப பாடசாலை. 1958–1952. புகைப்பட அச்சு, 29.2 x 14 செமீ. புகைப்படம் எடுத்தவர்



எட்வர்ட்ஸ் ரீட் மற்றும் பெக். வரைபடம், மூனுகங்க. 1969. டிரேசிங் காகிதத்தில் மை, 39 x 45 செமீ. சுமங்கல ஜயதிலக்கவால் வரையப்பட்டது.



எட்வர்ட்ஸ் ரீட் மற்றும் பெக். புகைப்படம், சிலோன் பெவிலியன், எக்ஸ்போ 70. 1970. புகைப்பட அச்சு, 17.7 @ 12.1 செமீ. புகைப்படம் எடுத்தவர் ஜெஃப்ரி பாவா


ஜெஃப்ரி பாவா மற்றும் அசோசியேட்ஸ். தளத்திட்ட வரைதல், ஜெய் மேத்தா இல்லம். திகதி அறியப்படவில்லை. 50.5 @ 37.7 செமீ. ஜெஃப்ரி பாவாவால் வரையப்பட்டது.


ஜெஃப்ரி பாவா மற்றும் அசோசியேட்ஸ். தரைத்தள வரைபடம், ஜெயவர்தன இல்லம், 1997 டிரேசிங் காகிதத்தில் மை, 107 x 73.5 செமீ. வருண கோமஸ்ஸினால் வரையப்பட்டது.


எட்வர்ட்ஸ் ரீட் மற்றும் பெக். பகுதி, ஈனா டி. சில்வா இல்லம். 1963 டிரேசிங் காகிதத்தில் மை 98.9 x 76.1 செமீ. லக்கி சேனாநாயக்கவினால் வரையப்பட்டது


எட்வர்ட்ஸ் ரீட் மற்றும் பெக். புகைப்படம், பென்தோட்டை பீச் ஹோட்டல். 1967–1973. புகைப்பட அச்சு, 30.5 x 25.7 செமீ. புகைப்படம் எடுத்தவர் டொக்டர் கே. பூலோகசுந்தரம்.


ஜெஃப்ரி பாவா மற்றும் அசோசியேட்ஸ். பகுதி, கந்தலமை ஹோட்டல். 1991–1994. டிரேசிங் காகிதத்தில் மை, 84 x 59 செமீ. டிம் பீச்ரால் வரையப்பட்டது

புத்தளத்தில் வேளாண்மை, இறால் பாதிப்பு

# இடறவைத்த இயற்கை



ரஸீன் ரஸ்மின்

தொடர்ச்சியாக பெய்துவந்த கடும் மழையால், புத்தளம் மாவட்டத்தில் வரலாறு காணாத வகையில் பல கிராமங்களும் வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஒவ்வொரு வருடமும் மழை பெய்யும் காலங்களில், தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குவது வழக்கமாக இருந்தாலும், இம்முறை இந்த வெள்ளம் மக்களுக்கு அழிக்க முடியாத தழும்புகளை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறது.

வெள்ளம் வழிந்தோடிவிட்டது. ஆனால், மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு இன்னமும் திரும்ப முடியாமல் உள்ளனர். இந்த வெள்ளத்தால் வீடுகள், வர்த்தக நிலையங்கள், வயல் நிலங்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் 12 கமநல கேந்திர மத்திய நிலையப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில், இம்முறை பெரும்போகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புத்தளம், வண்ணாத்திவில்லு, மதுரங்குளி, மகாகும்புக்கடவல, ஆனமடு, கருவலகஸ்வெவ, பள்ளம, ஆராச்சிக்கட்டு, சிலாபம், மாதம்பை, மகாவெவ, நாத்தாண்டி ஆகிய கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் உள்ளிட்ட பகுதியிலேயே, இவ்வாறு வேளாண்மை செய்கை மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மஞ்சள் நிறமாகவும் வளர்ச்சி குன்றியும் உரம், கிருமிநாசினி இன்றியும் தாம் மேற்கொண்டுள்ள பல ஏக்கர் வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 3,913 ஹெக்டேயர் வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்ட ஈடுகளை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் புத்தளம் மாவட்ட செயலாளர் கே.ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

தொடர்ச்சியாகப் பெய்துவந்த மழை காரணமாகவும், பல நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையாலும், குறித்த நீர், நெல் வயல் நிலங்களினூடாக மேவிப் பாய்வதாலும் நெற்பயிர் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கடும் மழை காரணமாக மரக்கறி செய்கையும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் குறிப்பிட்டனர்.

கடன்களைப் பெற்றும் , உரமும் இல்லாமலும் குறித்த நெற் செய்கையை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவித்த விவசாயிகள், 10 -20 நாள்களைக் கொண்ட நெற்பயிர்களே இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

## இறால் செய்கை பாதிப்பு

இதேவேளை, அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 1,200 மில்லியன் ரூபாய் பெறுமதியான இறால் அழிவடைந்துள்ளதாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ஜே.பி. சமிந்த லக்மால் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள எட்டு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 1,700 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இறால் பண்ணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டத்தில் 850 இறால் பண்ணைகள் காணப்படுகின்ற போதிலும், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி, 163 இறால் பண்ணைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், 1,200 மில்லியன் பெறுமதியான 800 தொன் கொண்ட இறால்கள் அழிவடைந்துள்ளன. சுமார் 95 மில்லியன் பெறுமதியான இறால் குஞ்சுகளும் வெள்ளத்தால் முழுமையாக அழிவடைந்துள்ளன.

இவ்வாறு வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இறால் பண்ணைகளின் வளர்ப்பாளர்களுக்கு நஷ்டஈடாக, இறால் குஞ்சுகளை கொள்வனவு செய்து கொடுக்க நிதி அமைச்சிடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எனினும், இதுவரை அனுமதி கிடைக்கவில்லை எனவும் உதவிப் பணிப்பாளர் ஜே.பி. சமிந்த லக்மால் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தாம் கடன்களைப் பெற்று இறால் வளர்ப்பில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், அதிகளவிலான இறால்கள் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுவதாகவும் இறால் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக புத்தளம் விஜயம் செய்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வெள்ளத்தால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள இறால் பண்ணை உற்பத்தியாளர்களையும், விவசாயிகளையும் சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது, இறால் வளர்ப்பாளர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாகவும் கூறினார்.

அத்தோடு, பாதிக்கப்பட்ட இறால் வளர்ப்பு பண்ணையாளர்களுக்கும், வேளாண்மை செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கும் நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்திருந்தார்.

எனவே, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியின்படி அரசாங்கம் உடனடியாக நஷ்டஈட்டை வழங்க வேண்டும் எனபண்ணையாளர்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.







விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 18 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.